# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



**விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார்
ஒரே இருதயமும்
ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள் (அப். 4:32).**

## TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

March - April 2021
Volume : 61
ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 2

ஆசிரியரிடமிருந்து........!



# ஒருமனமும் எழுப்புதலும்

**விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள் (அப். 4:32).**

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இந்த கடைசி நாட்களில் நாம் ஜெபித்து வரும் எழுப்புதலை ருசிப்பதற்கு விசுவாசிகளின் ஐக்கியமும் ஒருமனமும் மிகவும் அவசியம். நம்முடைய தேவன் ஒற்றுமையின் தேவன். அவர் திரித்துவ தேவனாக மூன்றில் ஒருவராக, ஐக்கியமாக இருக்கிறார். நாமும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று இயேசு ஜெபித்தார் (யோவான் 17:22). நாம் பிரிவினையில்லாமல், ஏக யோசனையும், ஏக மனதும், ஏக சிந்தையும், ஏக அன்பும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று பவுல் புத்திக்கூறுகிறார் (1 கொரி. 1:10; பிலி. 2:2). தேவ ஜனங்களைக் குறிப்பதற்கு வேதம் பயன்படுத்துகிற உவமானங்கள் ஒருமனதின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன. நாம் ஒரு “குடும்பம்” (கலா.6:10; 3:26), கிறிஸ்துவின் “சரீரம்” (ரோமர் 12:5) என்று வேதம் கூறுகிறது. ஆகவே நாம் வெற்றி பெற, சத்துருவின் திட்டங்களை முறியடிக்க, எழுப்புதலை காண நமக்கு ஒருமனம் அவசியம் என்று வேதம் வலியுறுத்துகிறது!

## 1) ஆதித் திருச்சபையின் ஒருமனமும், எழுப்புதலும் (EXEMPLIFICATION of Unity)

ஆதித்திருச்சபை விசுவாசிகள் ஐக்கியத்திலும் ஒருமைப்பாட்டிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள் என்று வேதம் கூறுகிறது (அப்.2:42). விசுவாசிகள் எல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள் (அப்.2:44;4:32). ஒருமனமும் ஐக்கியமும் ஆதித் திருச்சபையின் வெற்றிக்கும் எழுப்புதலுக்கும் காரணமாக இருந்தது என்பதை நாம் தெளிவாக வேதத்தில் காணமுடியும். ‘ஒருமனப்பட்டு‘ என்ற வார்த்தையை பலமுறை அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம் (அப்.1:14, 2:1, 2:46, 4:24, 5:12, 15:26). விசுவாசிகள் ஒருமனப்பட்டு ஜெபித்தார்கள், ஒருமனப்பட்டு உதவி செய்தார்கள், ஒருமனப்பட்டு ஊழியம் செய்தார்கள், ஒருமனப்பட்டு ஜெயம் எடுத்தார்கள். இப்படிப்பட்ட ஆதித் திருச்சபையின் மாதிரியை நாம் பின்பற்றும் போது அன்று ஏற்பட்ட எழுப்புதலை நாம் இன்றும் அநுபவிக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

## 2) உண்மையான ஒருமனப்பாட்டின் வெளிப்பாடுகள் (EVIDENCES of True Unity)

ஒருமனம் என்பது ஞாயிறு ஆராதனை முடிந்தவுடன் சிலருக்கு கைக்கொடுப்பதோ, சில சபை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதோ மட்டுமல்ல. உண்மையான ஐக்கியம் என்பது ஒருவரை ஒருவர் அன்போடு விசாரிப்பது, ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பது, ஒருவருக்கொருவர் உதவி செய்வது போன்றவற்றில் வெளிப்பட வேண்டும். ஆதித் திருச்சபையில் இப்படிப்பட்ட ஐக்கியத்தை நாம் காண்கிறோம் (அப்.2 : 42-47). இப்படிப்பட்ட ஐக்கியத்தை வலியுறுத்தும்படியாக புதிய ஏற்பாட்டில் “ஒருவருக்கொருவர்” ("One another" in English and ἄλλοι ἄλλους (álloi állous) in Greek) என்ற வார்த்தை 71 முறை கூறப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட காரியத்தை நாம் ஒருவருக்கொருவர் செய்வதின் மூலம் நாம் இவ்வுலகத்திற்கு நம்முடைய உண்மையான ஐக்கியத்தை வெளிப்படுத்த முடியும்.

- ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள் (யோவான் 13:34, 35).
- கனம்பண்ணுகிறதில் ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் (ரோமர் 12:11).
- ஒருவரிலொருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள் (ரோமர் 12:16).
- ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி உண்டாகும்படி செய்யுங்கள் (1தெச.5:11, ரோமர் 14:19).
- ஒருவருக்கொருவர் புத்திச்சொல்லுங்கள் (ரோமர் 15:4, கொலோ. 3:16).
- ஒருவரையொருவர் விசாரியுங்கள் (1கொரி. 12:25).
- ஒருவருக்கொருவர் அன்பினாலே ஊழியம் செய்யுங்கள் (கலா. 6:2).
- ஒருவருக்கொருவர் தயவாயும் மனவுருக்கமாயிருங்கள் (எபே. 4:32).
- ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபே. 4:32, கொலோ. 3:13).
- ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் (எபேசியர் 5:21, 1பேதுரு 5:5).
- ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணுங்கள் (பிலிப்பியர் 2:3).
- ஒருவரையொருவர் தேற்றுங்கள் (1தெச. 4 : 18, 5 : 11)
- ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள் (யாக்கோபு 5 : 16).
- ஒருவரையொருவர் உபசரியுங்கள், உதவி செய்யுங்கள் (1பேதுரு 4:9,10)

நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாகவும், ஒருவருக்கொருவர் அவயவங்களாயும் இருக்கிறபடியால், இவைகளை ஒருவருக்கொருவர் செய்து ஒருமனமாக இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 12:5, எபேசியர் 4:25). ஆகவே, குடும்ப உறவிலும், திருச்சபை உறவிலும் மேற்கண்ட காரியங்களை வெளிப்படுத்தி ஒருமனப்பாட்டில் தேறுவோம் (யோவான் 17:23).

## 3) ஒருமனப்பாட்டின் எதிரிகள்
## (ENEMIES of Unity)

குடும்பத்திலும், திருச்சபைகளிலும் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் கெடுக்க பிசாசுத் தீவிரமாக செயல்படுகிறான். அவனுக்கு இடம் கொடாதிருங்கள் (எபே.4:27). நாம் ஒருவருக்கொருவர் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிற வேதம், நாம் ஒருவருக்கொருவர் என்ன செய்யக்கூடாது என்பதையும் வலியுறுத்துகிறது. அவைகளை நாம் தவிர்க்கும்போது எதிரியை மேற்கொள்ள முடியும். ஒருவரையொருவர் குற்றவாளிகளாக தீர்க்காதிருங்கள் (ரோமர் 14:13). ஒருவரையொருவர் கோபம் மூட்டாமலும், ஒருவர்மேலொருவர் பொறாமை கொள்ளாமலும் இருங்கள் (கலா.5:26). ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள் (கொலோ.3:19). ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதிருங்கள் (யாக். 4:11).

புறங்கூறுதல், கசப்பு, மன்னியாமை, பொறாமை, சுயநலம், வாது, வீண் பெருமை ஆகியவை விசுவாசிகளுக்குள் கண்டிப்பாக இருக்கக்கூடாது (பிலி.2:2; 1 பேதுரு 2:2). இவைகள் ஐக்கியத்தின் எதிரிகள். இவைகள் நம் குடும்பத்திலும் சபையிலும் இருக்கும்போது பிசாசுக்கு கொண்டாட்டம். ஆனால் நாம் இவைகளை களைந்துவிடும்போது பிசாசு வெட்கப்படுப்போவான். நாம் வளருவோம், திருச்சபையும் வளரும்.

“தன் குடும்பம் ஏன் முன்னேறவில்லை; தன் சபை ஏன் எழுப்புதலடைய வில்லை?” என்று சோர்வோடு அமர்ந்திருந்த ஒருபக்தன், தன் அருகில் ஒரு எறும்புக் கூட்டத்தைக் கண்டார். ஒரு சிறு சர்க்கரைக் கட்டியை ஏழு, எட்டு, எறும்புகள் ஒன்று சேர்ந்து இழுத்துச் செல்ல முயற்சித்துக் கொண்டிருந்தன. ஆனால் சர்க்கரைக் கட்டியோ நகரவில்லை. சர்க்கரைக் கட்டி சிறியதுதான். எறும்புகளின் பெலமோ அதிகம். ஆனால் ஏன் சர்க்கரைக் கட்டி நகரவில்லை? காரணத்தை அவர் கண்டுபிடித்தார். ஆம், எட்டு எறும்புகளும், எட்டு இடத்திலிருந்து, எட்டுபக்கம் இழுத்துக் கொண்டிருந்ததால் முன்னேற முடியாமற் போய்விட்டது. இந்த எட்டு எறும்பும் ஒன்று சேர்ந்து ஒரே திசையில் இழுத்துச் சென்றால், எவ்வளவு வேகமாக சர்க்கரை நகரும். இப்பொழுது அவருக்குப் புரிந்தது. தன் குடும்பத்திலும் ஒருமனப்பாடு இல்லாமல், ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கம் செலவு செய்து, ஒருவரை ஒருவர் எதிர்ப்பாய் நிற்பதால்தான் முன்னேறவில்லை. தன் திருச்சபையில் எழுப்புதல் தாழ்ச்சிக்கு காரணமும் அதுவே என்று கண்டுபிடித்தார்.

ஆம் அருமையானவர்களே, இன்று நம்மிடையே நிலவுகின்ற சிறுசிறு மனவருத்தங்கள், சிறுசிறு காரியங்கள் நம் சபையின் மூலமாக வர இருக்கின்ற பெரிய எழுப்புதலுக்கு தடையாக இல்லாதபடி ஒருவரையொருவர் மன்னித்து, சபையாக ஒருமனப்படுவோம். சத்துருவுக்கு எதிர்த்து நிற்போம். தேசத்தை கிறிஸ்துவுக்கு சொந்தமாக்குவோம்.

## 4) ஒருமனப்பாட்டின் ஆசீர்வாதங்கள்
## (EXCITING BLESSINGS of Unity)

நம்மில் ஒருமனம் காணப்படும்போது அநேக ஆசீர்வாதங்களை தேவன் நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார். ஒருமனம் உள்ள இடத்தில் தேவன் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் என்று சங்.133:1-3ல் வாசிக்கிறோம். மேலும் கீழ்க்கண்ட பல ஆசீர்வாதங்களையும் நாம் அனுபவிக்க முடியும்!

- ஜெபத்திற்கு பதில் உண்டாகும் (மத்தேயு 18:9; அப்.12:5).
- ஆவிக்குரிய பாதுகாப்பு, உதவி கிடைக்கும் (பிரசங்கி 4:9-12; உபா. 32:30).
- சாத்தான் மேல் வெற்றி கிடைக்கும் (பிரசங்கி 4 : 12).
- தேவைகள் சந்திக்கப்படும் (அப். 4:32, கலா. 6:10).
- உலகம் இயேசுவை விசுவாசிக்கும் (யோவான் 17:21).
- இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படலாம் (எபிரெயர் 10 : 25).
- மகத்தான எழுப்புதலை காணலாம் (நெகே. 8:1-18; 2 நாளா. 30:12-27; அப். 2:1-4).

ஒரே ஒரு காரியத்தை சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடிக்க விரும்புகிறேன். நாம் எல்லோரும் வெட்டுக்கிளிகளை பார்த்திருக்கிறோம். அது தனியாக தாவி தாவி வரும்போது அதனால் யாரும் பயப்படுவதில்லை. அதில் எந்த முக்கியத்துவமும் இல்லை. ஆனால் அதுவே ஒரு முழு படையாக வரும்போது, வழியில் காணப்படும் எந்தவிதமான பச்சையான இலைகளையும் விட்டுவைக்காமல், முழு பயிர்களையும் மேய்ந்து போடும். வெட்டுக்கிளிகள் ஒன்றாக இணைந்து செயலாற்றும் தன்மைக்கொண்டவை. தனியாக அவை எவற்றை செய்ய முடியாதோ அவற்றை அவைகள் கூட்டமாக இருக்கும்போது செய்து முடித்துவிடும். பூமியில் சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு என்று

ஆகூர் கூறுகிறார். அதில் வெட்டுக்கிளிகளைக் குறித்து, ராஜா இல்லாதிருந்தும், பவுஞ்சு பவுஞ்சாய்ப் புறப்படுகிற வெட்டுக்கிளிகள் என்று குறிப்பிட்டுள்ளார் (நீதி. 30:27).

இந்த மிகச்சிறிய உயிரினமான வெட்டுக்கிளிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் உண்டு. கிறிஸ்துவின் விசுவாசிகள், தாங்கள் தனியாக இருந்து செய்யும் காரியங்களைவிட ஒரு குழுவாக, ஒரே மனதாக ஜெபித்து கர்த்தருக்கென்று உழைக்கும் போது, அரிய பெரிய காரியங்களை செய்யலாம், பெரிய சேனையாக எழும்பி, கர்த்தர் தமது சபையை கொண்டு செய்ய இருக்கும் நோக்கத்தை நிறைவேற்ற முடியும். நம் வாழ்வில் நாம் எண்ணி பார்க்காத அளவு ஆசீர்வாதங்களை நிச்சயம் காண முடியும்.

விசுவாசிகள் என்னும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒருமனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி

---

## ஏ.ஜி. திருச்சபைகளின் அடிப்படை வேதாகம உபதேசங்கள்

1. பரிசுத்த வேதாகமம் ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது (2 தீமோ. 3:16,17).
2. ஒரே மெய்யான தேவன் திருத்துவமாக வெளிப்பட்டுள்ளார் (உபா.6:11, மத். 28:19).
3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தெய்வீகமானவர் (மத். 1:23).
4. மனிதன் தானாக மீறுதலுக்குட்பட்டு வீழ்ச்சியடைந்தான் (ஆதி.1:26,27, 2:17, 3:6).
5. தேவ குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் மட்டுமே மனிதன் இரட்சிக்கப்பட முடியும் (எபே. 2:8, ரோமர் 10:13-15).
6. சபையின் அனுசாரங்களான முழுக்கு ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி ஆகியவை திருவசன கட்டளை (மாற்கு 16:16, ரோமர் 6:4, 1 கொரி. 11:26).
7. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் சாட்சியுள்ள ஜீவியத்திற்கும் வல்லமையான ஊழியத்திற்கும் அவசியம் (அப். 1:8)
8. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் வெளிப்படையான ஆரம்ப அடையாளம் அந்நிய பாஷை (அப். 2:4).
9. பரிசுத்தமாகுதல் (ரோமர் 12:1,2 ; 1 தெச. 5:23).
10. பாவத்தில் இழந்து போனவர்களை தேடி இரட்சிப்பது சபையின் அருட்பணியாகும் (மத்தேயு 28:19,20).
11. ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருக்காக ஊழியம் செய்யும் ஊழியனாக செயல்பட வேண்டும். மேலும் சபையில் தலைமைத்துவ பொறுப்புகளில் ஐந்துவித வரமுள்ள ஊழியங்களைக் கர்த்தர் நியமித்துள்ளார் (எபே. 4:12,13).
12. தெய்வீக சுகம்-மீட்பின் பரிகாரத்தில் வியாதியினின்று விடுதலை பெறுவதற்கான பரிகாரமும் உட்பட்டுள்ளது (ஏசாயா 53:4, 5, மத்தேயு 8:17).
13. கிறிஸ்துவின் வருகையில் அவரை சந்திப்பது சபையின் ஆசீர்வாதமான நம்பிக்கையாகும் (1 தெச. 4:16,17).
14. இயேசு தமது பரிசுத்தவான்களோடு திரும்ப வந்து இப்பூமியில் 1000 வருடம் ஆட்சி செய்வார் (வெளி. 20:1-6).
15. கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு இறுதி நியாயத்தீர்ப்பு உண்டு (வெளி.20:11-15)
16. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்காக புதியவானமும் புதிய பூமியும் உண்டாகும் (வெளி. 21,22).



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 12. ஆவிக்குரிய வரங்கள் சபையில் செயல்பட்டன

தொடர்ச்சி

அன்று

ஆவியின் வரங்கள் சபையில் தாராளமாக செயல்பட்டன. 1 கொரிந்தியர் 12-ம் அதிகாரத்தில் ஆவியின் வரங்கள் ஒன்பது என பவுல் குறிப்பிடுகிறார்.

**1)** ஞானத்தைப் போதிக்கும் வசனம்.
**2)** அறிவை உணர்த்தும் வசனம்.
**3)** விசுவாசம்.
**4)** குணமாக்கும் வரம்.
**5)** அற்புதங்களைச் செய்யும் சக்தி.
**6)** தீர்க்கதரிசனம்.
**7)** ஆவிகளைப் பகுத்தறிதல்.
**8)** பற்பல பாஷைகளைப் பேசுதல்.
**9)** பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்.

ரோமர் 12:6-8-ல் கூறப்பட்டுள்ளவைகளும் வரங்கள் என்று கூறப்படுகிறது.

நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே என்று பவுல் எழுதுகிறார் (ரோமர் 12:5).

**1)** பணிவிடை செய்தல் (ஊழியம் செய்தல்).
**2)** போதித்தல்.
**3)** புத்தி சொல்லுதல்.
**4)** தாராளமாகக் கொடுத்தல்.
**5)** தலைமைத்துவம்.
**6)** இரக்கம் செய்கிறவன் (ஏழைகளுக்கு இரங்கி நன்மைகள் செய்தல்).

ஆதிச்சபையில் இந்த ஆன்மீக வரங்கள் செயல்பட்டன. இதனால் சபை வளர்ந்தது, சுத்திகரிக்கப்பட்டது. இயேசுகிறிஸ்து சர்வ வல்லவர் என்பது நிரூபிக்கப்பட்டது.

### ஞானத்தைப் போதிக்கும் வசனம் (Word of Wisdom)

ஞான வார்த்தை தெய்வீக ஞானத்தால் நிறைந்த சமயத்திற்கு ஏற்ற வார்த்தை பேசுதல்.

**1)** ஆதி சபையில் இயேசுவை ஏற்றுக்கொண்ட புற ஜாதியாரும் விருத்தசேதனம் பண்ண வேண்டும் என்று சிலர் போதித்தபோது, உபதேசப் பிரச்சனை ஏற்பட்டது. அப்போஸ்தலர் எருசேலமில் கூடி விவாதித்து ஓர் முடிவு எடுத்தனர். அப்போஸ்தலனாகிய யாக்கோபு:

உலகத்தோற்ற முதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது. ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாதென்றும், விக்கிரகங்களுக்கும் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுத வேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன் (அப்.15:18-20, 28-31).

...என்று தேவ ஞானத்தால் ஆலோசனை கூறினபோது பிரச்சனை ஓர் முடிவுக்கு வந்தது. சபையில் ஆறுதல் உண்டாயிற்று.

**2)** பவுல் அத்தேனே பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருப்பதைக் கண்டு, தன் ஆவியில் வைராக்கியமடைந்தார். அறியப்படாத தேவனுக்கு என்று எழுதப்பட்டிருந்த ஒரு பலிபீடத்தைக் கண்டார். அவர் ஞானமாய் பிரசங்கம் பண்ணினார்.

நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன்.. அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் (அப்.17:16,22,23).

**3)** ஸ்தேவான் பேசின ஞானத்தையும், ஆவியையும் அவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை (அப். 6:10).

**அறிவை உணர்த்தும் வசனம் (Word of Knowledge)**

என்ன நடந்தது என்பதை தேவ வல்லமையால் அறிந்து கூறுவது:

**1)** அனனியா, சப்பீராள் பணத்தை வஞ்சனை செய்ததை பரிசுத்த ஆவியானவர் பேதுருவுக்கு வெளிப்படுத்தினார் (அப். 5: 1-11).

**2)** சமாரியப் பெண்: இயேசு சமாரியப் பெண்ணைப் பார்த்து உன் புருஷனை அழைத்துக்கொண்டு வா என்று சொன்னபோது, எனக்கு புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளைப் பார்த்து: நீ சொன்னது சரிதான். உனக்கு ஐந்து புருஷர்கள் இருந்தார்கள். இப்போது இருக்கிறவன் உனக்கு புருஷன் அல்ல என்றார்.

பரிசுத்த ஆவியின் அருளால் ஏற்கெனவே நடந்த காரியங்களை வெளிப்படுத்துதல்.

**3)** நாத்தான்வேலே, பிலிப்பு உன்னை அழைப்பதற்கு முன்னே நீ அத்திமரத்தில் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார் (யோவான் 1:47-49).

**விசுவாசமாகிய வரம்**

அசாதாரணமான விசுவாசத்தைக் கர்த்தர் சிலருக்கு வரமாகத் தருகிறார்.

**1)** பிறவியிலேயே முடமாயிருந்த ஒருவனைப் பார்த்து, பேதுரு, நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நட என்று விசுவாசத்தால் கட்டளையிட்டு அவனைத் தனது வலது கையினால் தூக்கிவிட்டான். உடனே அந்த சப்பாணி நடந்தான். இங்கே பேதுரு ஜெபம் பண்ணவில்லை. விசுவாச வார்த்தையைப் பேசினான். அற்புதம் நடந்தது (அப். 3:1-8).

**2)** எட்டு வருடமாக திமிர்வாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த ஐனேயாவைப் பார்த்து, பேதுரு, இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார், நீ எழுந்து உன்

படுக்கையை நீயே போட்டுக்கொள் என்று விசுவாச வார்த்தையைப் பேசினபோது திமிர்வாதக்காரன் குணமாகி நடந்தான் (அப்.9:32-35).

3) லீஸ்திராவில் பிறவி முடவனை பவுல் பார்த்து, நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று விசுவாச வார்த்தையைப் பேசினபோது அற்புதம் நடந்தது (அப்.14:8-10).

**குணமாக்கும் வரம்**

வியாதியுள்ளவர்களை தேவ வல்லமையால் குணமாக்கும் வரம் அப்போஸ்தலர் மூலம் வல்லமையாய் கிரியை செய்தது.

1) பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும், கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்.

சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும், அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள் (அப்.5:15,16).

2) அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும், சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.

அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று (அப். 8:7,8).

3) பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.

அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப் போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன (அப்.19:11,12).

**இன்று**

இன்று பெரும்பான்மையான சபைகளில் ஆவிக்குரிய வரங்கள் செயல்படவில்லை. தேவ வல்லமை வெளிப்படுவதில்லை. சடங்காச்சார ஆராதனைகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆவியின் வரங்களைக் குறித்த நம்பிக்கையில்லை. நம்பிக்கையுள்ளவர்களும் அதைக் குறித்துப் போதிப்பதில்லை. வரங்கள் செயல்பட எதிர்பார்ப்பதில்லை; அதற்காக ஜெபிப்பதுமில்லை.

- தொடரும்

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102



# நீங்களும் பைபிளை வாசிக்கலாம்

## You too can read the Bible


**Rev. Dr. L. ஜெயபாலன்**

மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்


**இன்று நீங்கள் பைபிளை வாசித்தீர்களா?**

சார்லஸ் டார்வின் என்றவுடன் அவர் பரிணாமக் (Evolution) கொள்கையை கண்டுபிடித்தவர் என்று பள்ளியில் படித்திருக்கிறோம். அவர் போதகரின் மகன். இளவயதிலேயே தான் ஒரு மிஷனரியாக வெளிநாடு செல்ல வேண்டும் என்ற வாஞ்சையில் இருந்தாராம். அவர் விஞ்ஞானத்தில் ஆர்வமாக இருந்ததால், தனது ஆசிரியரின் அறிவுரைபடி வண்டுகள் போன்றவைகளை ஆராய்ச்சிசெய்து "I may well suppose" “நான் இவ்வாறு என யூகிக்கக்கூடும்” என்று தனது பரிணாமக் கொள்கையை பரப்பினாராம். இதனால் ஐரோப்பாவில் குரங்கு படத்தை வைத்து, இதுதான் எனது முற்பாட்டன் என அவருடைய கொள்கையை நம்பினோர் அறிக்கையிட்டார்களாம்.

அவர் தமது ஆராய்ச்சியின் நிமித்தம் பல இடங்களுக்கு கப்பலில் பிரயாணம் பண்ணினாராம். தென் அமெரிக்காவிலுள்ள படகோனியா என்ற இடத்திற்கு சென்றபொழுது, அங்கு அவர் கண்டதை தனது சொற்பொழிவில் “அங்குள்ள மக்கள் தங்களது கலாச்சாரத்தில் பல ஆயிரம் வருடங்கள் பின்தங்கியுள்ளனர். அவர்கள் ஆடை அணிவதும் இல்லை, உழவுத்தொழில் செய்வதும் இல்லை. நாம் தெருநாய்களைக்கூட மாற்றிவிடலாம், ஆனால் இவர்களுடைய காரியத்தில் நாம் ஒன்றுமே செய்ய இயலாது” என்று கூறினாராம்.

இதை கேட்ட தாமஸ் பிரிட்ஜ், அம்மக்களுக்கு வேதாகமத்தைப் போதித்து, அவர்கள் வாழ்க்கை முறையை மாற்ற முடியும் என நம்பினார். அந்த காட்டுமிராண்டிகள், தங்கள் பெற்றோர் வயோதிப நிலையை அடையும்போது அவர்களை சாப்பிட்டு விடுவார்களாம். தாமஸ் அங்கு சென்று அவர்கள் பேசும் மொழியைக் கற்றார். உழவுத் தொழிலும், வீடு கட்டும் முறையும் சொல்லிக் கொடுத்தார். அவர்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியையும் போதித்தார்.

ஏழு வருடங்கள் கழித்து டார்வின் அவ்விடம் சென்றபொழுது, கடவுளின் வார்த்தை (பைபிள்) இவர்களுடைய வாழ்க்கையை எவ்விதமாக மாற்றியது என்பதைக் குறித்து ஆச்சரியப்பட்டு, டார்வின் மரிக்கும்வரை அந்த மக்களுக்கு பண உதவிசெய்தாராம். என்னவிந்தை. உண்மையிலும் உண்மை. 52 வருடங்களுக்கு முன், ஞாயிறு பள்ளி தலைவராக அநேக பிள்ளைகள் மத்தியில், கல்லூரியில் போதித்துக்கொண்டே நான் பணிபுரிகையில், வேதாகமக் கல்லூரியில் முதல்வராய் ஊழியம் செய்த காலஞ்சென்ற சகோதரி குயின் அவர்கள் வகுப்பில் ஒரு பாடலைக் கற்றுக்கொடுத்தார்கள்.

"வேத வார்த்தை சம்மட்டி போல
அது பாறையை பிளக்கிறது.
பாதைக்கு வெளிச்சமாக, கடும் புயலிலும் தீபமாக
கருக்கான பட்டயம் போல
நாம் பார்க்கும் கண்ணாடியாக.. அது இதுவே
சிறந்தப் புத்தகம் வே..தா..க..ம..ம்"

இந்த வேதாகமம் நெருப்பு, பொன், சுத்தியல், தேன், ஜீவனுக்கு ஒப்பானதாகும். நம்மை சுத்திகரிக்கும், விலையேறப்பெற்றது, நம்மை உடைத்து உருவாக்கும், இனிமையானது. நமக்கு ஜீவனாக நம்மில் செயல்படக்கூடியது.

**வெளிச்சம் (LIGHT) :**

"உம்முடைய வசனம், என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங். 119:105).

"இருள் இருளை விரட்ட முடியாது. ஆனால் வெளிச்சம் இருளை அகற்றிவிடும்" என்றார் ஒருவர். வெளிச்சம் இருளுக்கு எதிரானது. நமது பயத்தைபோக்கும் பாதையைக் காட்டும். நாம் சேரவேண்டிய இடத்திற்கு நம்மை கொண்டு செல்லும்.

"உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்". இந்த வேதத்தில் ஆழ்ந்த சத்தியங்கள் உள்ளன. அவைகளை அறிய தேவனின் அருள் தேவை. ஒரு வசனத்தை அறிய இன்னொரு வசனம் நமக்கு உதவியாயிருக்கிறது.

ஜெபத்தில் தேவனை நாம் நோக்கிப் பார்க்கையில் நாம் பிரகாசம் அடைவது மட்டுமன்றி, வேத வசனத்தின் ஆழ்ந்த தன்மைகளையும் அறிய முடியும்.

சில கடத்தல்காரர்கள், கழுதைகளை வாகனங்களாக உபயோகித்து ஒரு குறிப்பிட்ட தேசத்தின் எல்லைக்குள் நுழைந்து வந்தனர். காவல்துறையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர், பைபிளை நன்கு அறிந்திருந்தார். ஒரு சில கழுதைகளைப் பிடித்து பட்டினியாக இருக்கவைத்து, பின்னர் அதை அவிழ்த்துவிட்டார். அந்த கழுதைகள் கடத்தல்காரர்கள் தங்கியிருந்த குகையை கண்டுபிடிக்க உதவிற்று. "மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்"(ஏசாயா 1:3).

**பலமான ஆகாரம் (MEAT) :**

பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று, பயிற்சியினால், பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும், ஞானேந்திரியங்களையுடைய வர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும் (எபி. 5:12-14).

பலமான ஆகாரம் உடலுக்கு பெலத்தையும், வேலை செய்வதற்கு நிலையான தன்மையையும் தரும். இந்த வேதத்தை வாசிக்க, வாசிக்க கடவுளுக்கு முன் பரிசுத்தமாயிருக்கையில், ஆழ்ந்த கருத்துக்களையும், ஆவிக்குரிய வாழ்க்கையில் முதிர்ச்சியையும் தரும்.

**பால் (MILK) :**

"நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய, களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2:3).

கடவுளுடைய வார்த்தை சிறுபிள்ளைகள் முதற்கொண்டு முதியோர்வரை பின்பற்றக்கூடிய ஒன்றாகும். பாலானது பிள்ளைகள் வளர்ச்சிக்கு மிக அவசியமானது. எனது பெற்றோர்கள், எனக்குப் போதித்த முக்கிய வசனங்கள். "ஜீவ அப்பம் நானே-இயேசு கண்ணீர் விட்டார்" என்பதாகும். நாளடைவில் சங்கீதங்களில் 1,23,46,91,103,121 இவைகளை மனப்பாடமாக சொல்ல வைத்தார்கள். தினமும் 91-ம் சங்கீதம் சொல்லி பாட்டுப்பாடி, ஒவ்வொருவராக ஜெபம் செய்து உறங்குவது வழக்கமாக இருந்தது. கொரோனா நேரத்தில் 91-ம் சங்கீதம் ஆறுதலாகவும், நம்பிக்கைக்குரியதாகவும் இருந்து வருகிறது.

**கண்ணாடி (MIRROR) :**

"இப்பொழுது நாம் கண்ணாடியில் நிழலோட்டமாய் பார்க்கிறோம்" (1கொரி.13:12).

முகம் பார்க்கும் கண்ணாடியை கண்டுபிடிக்காத காலத்தில் "செம்பு" (Brass) கண்ணாடியாக உபயோகப்பட்டு வந்தது. கண்ணாடியில் நமது முகத்தைக் காண்கிறோம். வேத வசனமாகிய கண்ணாடியில், கடவுளை காணமுடிகிறது. அவருடைய பண்புகள் நமக்கு பளிச்சென்று காணப்படுகிறது. நம்மை நாமே காணமுடிகிறது. வேதவசனம் பட்சபாதம் காட்டாது. போதகரோ, மூப்பரோ, விசுவாசியோ யாரானாலும் அப்படியே பேசும்.

ஒரு குறிப்பிட்ட சபையிலே, சாவு மணி ஓசை கேட்டது. அங்கத்தினர்களுக்கு யார் என்று தெரியாததால் போதகரிடம் கேட்டபோது சபையாரைக் குறித்த மிகுந்த பாரம்கொண்ட போதகர், குறிப்பிட்ட நேரத்தில் அடக்க ஆராதனை நடத்தப்படும் என அறிவித்தனர். ஜெபம், பாடல், சிறிய பிரசங்கம் முடிந்தவுடன் பலிபீடத்திற்கு அருகே வைக்கப்பட்ட பெட்டியில் உள்ளவரின் முகத்தை கடைசியாக பார்க்க அழைக்கப்பட்டனர்.

ஆவலுடன் முந்திக்கொண்டு வந்த அங்கத்தினர்கள் அருகே வந்து பார்த்தவுடன் வெட்கத்துடன் சென்றனர். ஏனெனில் அங்கு வந்த ஒவ்வொருவரும், தங்கள் முகத்தையே அதினுள்ளே வைக்கப்பட்ட முகக்கண்ணாடியில் கண்டனர்.

நாம் வேதாகமத்தை வாசிக்கையில், "அசதியாய் ஊழியம் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" என்பதை வாசிக்கையில் எச்சரிக்கப்படுவார், ஊழியம் செய்யாமல் சோம்பேறியாக உள்ள போதகர், பாவத்தோட பாவத்தைக் கூட்டுகிறவனுக்கு ஐயோ என்பதை வாசிக்கையில், அது எச்சரிப்பின் செய்தியாக ஒவ்வொருவருக்கும் இருக்கும். இதை வாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சரி, வேதாகமம் வாசிப்பதை விட்டுவிடாதீர்கள்.

பரிசுத்தாவியின் அபிஷேகம் மற்றும் குடும்ப ஆலோசனைகளுக்கு 94434 74921 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

# A.G. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி

(An ATA Accredited College)
மதுரை - 625 016
Email : agtbc1948madurai@gmail.com Website : www.agtbc.org

## I. Residential Studies

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years
**Eligibility :** Any Degree from Recognized University (10+2+3)

### 2. Bachelor of Theology (B.Th.,)

**Medium** : English and Tamil | **Duration** : 3 Years
**Eligibility** : +2 Pass (10+2)

## II. Modular Studies

### 1. Master of Divinity (M.Div)

**Medium** : English | **Duration** : 3 Years (For Men and Women)
Eligibility: Any Degree from Recognized University (10+2+3)
B.Th Degree or its equivalent
Men must be above 25 years. Women must have been married

### 2. Bachelor of Theology (B.Th) (For Men and Women)

**Medium** : Tamil | **Duration** : 3 Years
Eligibility: S.S.L.C. and Diploma in Theology (10+Dip.Th) (Only for Ministers)

## III. Extension Studies

### 1. Diploma in Theology (Dip.Th) (For Men and Women)

**Medium** : Tamil | **Duration** : 2 Years
Eligibility: S.S.L.C. (X Pass)

கி.பி.2021-22-க்கான நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவம் வரவேற்கப்படுகின்றன.
ஜீன் 2021-ல் கல்லூரி வகுப்புகள் தொடங்கும்.

---

**விண்ணப்ப படிவத்திற்கு**

**Download Application Form : www.agtbc.org**

---

தொடர்பு:

*Director of Academics*

**AG Tamilnadu Bible College**
Post Box-1, Bye Pass Road, Madurai - 625 016
Cell : 96982 55027, 94430 70974, Ph: 0452 2601940.



# ஆதியாகமம்

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

### பஞ்சாகமம்

ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களும் 'பஞ்சாகமம்' என்று அழைக்கப்படுகிறது. **'பஞ்சாகமம்'** என்றால் ஐந்து ஆகமங்கள் எனப் பொருள்படும். உலக சிருஷ்டிப்பின் வரலாறு தொடங்கி, மோசேயின் மரணம் வரைக்குமுள்ள சரித்திர சம்பவங்களை இப்புத்தகங்கள் நமக்குத் தருகின்றன. இவை **'நியாயப்பிரமாண புத்தகங்கள்'** என்றும் அழைக்கப்படுகின்றன. யூதர்கள் இப்புத்தகங்களை **'தோரா'** (Torah) என்று அழைத்தார்கள். தோரா என்பது 'சட்டம்' அல்லது 'நியாயப்பிரமாணம்' (Law) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சில இடங்களில் முழு பழைய ஏற்பாடுமே நியாயப்பிரமாணப் புத்தகமாக குறிப்பிடப்படுவதும் உண்டு. தோரா என்பது வழிகாட்டும் புத்தகமாகவும், போதனை புத்தகமாகவும் யூதர்களால் கொள்ளப்பட்டது. அத்துடன் இஸ்ரவேல் ஜனங்களின் சரித்திரப் புத்தகமாகவும் எடுத்தாளப்பட்டது.

### ஆதியாகமம்

ஆதியாகமம் ஆரம்பங்களின் புத்தகம். தேவன் உலகத்தை சிருஷ்டித்தார்; மனிதர்களாகிய நம்மையும் சிருஷ்டித்தார். நமக்கும் தேவனுக்கும், நமக்கும் தேவன் படைத்த உலகத்திற்கும் உள்ள உறவினை விளக்கிக் காட்டுகிறது ஆதியாகமம். இதில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் அனைத்திலும் மனிதனுடைய தேவை பிரதானமாக சுட்டிக்காட்டப்படுகிறது; தங்கள் பாவங்களை மறைக்க ஆதாமுக்கும், ஏவாளுக்கும் தோலுடை தேவைப்பட்டது; அழிவிலிருந்து காக்கப்பட்ட நோவாவுக்கு பெரும் படகு ஒன்று தேவைப்பட்டது; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு என்பவர்களுக்கு தேவன் அருளும் உதவியும் மீட்பும் தேவைப்பட்டது. எனவே ஆதியாகமம் முழுவதிலும் **நமது தேவைக்கு தேவனுடைய பதில்** என்ன என்ற விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது எனலாம். ஆதியாகமத்தின் ஆசிரியர் மோசே; முழு பஞ்சாகமத்தை எழுதியவரும் மோசேதான்.

ஆதியாகமம் என்பதை ஆரம்பங்களின் சரித்திரத் தொகுப்பு எனவும் அழைக்கலாம். பஞ்சாகமத்தின் மற்ற நான்கு புத்தகங்களுக்கு இப்புத்தகம் முன்னுரையாகவும் அமைந்துள்ளது. உலகமும், அதனுடனுள்ள அண்டசராசரங்கள் அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்ட சரித்திரமும், மனுக்குலத்தின் ஆரம்பம் குறித்தும் ஆதியாகமம் மட்டுமே நம்பத்தக்க விபரங்களைத் தருகிறது. இப்புத்தகம், திருமணம், பாவம், மனுமக்கள் குடியேறிய பட்டணங்கள், அவர்கள் பேசிய மொழிகள் மற்றும் தேசங்கள் பற்றியும் தெளிவுறச் சொல்லுகிறது. தேவன் ஆபிரகாம் மூலமாய் மனுக்குலத்துடன் ஏற்படுத்திய உடன்படிக்கை, ஆபிரகாமின் சந்ததியில்வரும் இயேசுவின்மூலம் முழு மனுக்குலத்துக்கும் வரும் இரட்சிப்பு, இவை அனைத்தும் ஆதியாகமம் தரும் அடிப்படை செய்திகளாகும். ஆதியாகமம் 50 அதிகாரங்களைக் கொண்டது.

இதில் **ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு** என்ற ஆறு முக்கிய மனிதர்கள் பற்றியும் அவர்கள் காலச் சரித்திரம் பற்றியும் பார்க்கிறோம். ஆதியாகமம் முழுவதுமே தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் சரித்திரத்தையே நமக்குத் தருகிறது.

**ஆதாம், நோவா** (1-11 அதி;).

இவர்கள் காலத்தை ஆரம்பகால சரித்திரம் எனவும் அழைக்கலாம். ஆதியாகமம் 1,2 அதிகாரங்களில் தேவனை உலக சிருஷ்டிகர்த்தராக நாம் பார்க்கிறோம்; வானம் பூமி யாவையும், ஜீவராசிகள், மரம் செடி கொடிகள் அனைத்தையும் ஆதிமனிதரான ஆதாம் ஏவாள் என்பவர்களையும் சிருஷ்டித்து அவர்களை ஏதேன் தோட்டத்தில் வைத்தார்.

இன்றைய உளவியல் ஆராய்ச்சியின்படி மரம்செடி கொடிகளுக்கு ஓரறிவு என்பர். ஊர்வனவற்றிற்கு இரண்டு அறிவு; நீந்தும் ஜீவராசிகளுக்கு மூன்றறிவு; பறப்பனவற்றிற்கு நான்கறிவு; மிருக ஜீவன்களுக்கு ஐந்தறிவு. ஆனால் மனுஷனோ ஆறு அறிவு உள்ளவனாகப் படைக்கப்பட்டான். ஆதாமும் ஏவாளும் மட்டுமே தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்டனர். ஆதாம் மண்ணினால் உருவாக்கப்பட்டு, தேவன் தமது ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதி அவனை உயிர் பெறச்செய்தார். மற்றவைகளை ஜநிப்பிக்கக்கடவது, பிறப்பிக்கக்கடவது என்றுரைத்து சிருஷ்டித்த தேவன், மனுஷனையோ தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார். இது அவனைப் பகுத்தறியும் சக்தியுள்ளவனாயும் ஒழுக்க நிலையில் நடக்கும் திறமையுள்ளவனாகவும் விளங்கச் செய்தது. மற்ற சிருஷ்டிகளுக்கு இல்லாத, தேவனை நோக்கிப்பார்க்கும் தன்மையுடைய ஆத்துமாவையும் தேவன் மனிதனுக்குச் சிறப்பாக தந்தார். தாம் படைத்த அனைத்துப் படைப்பின்மேலும் ஆளுகையுடையவனாக, பூமியிலே தமது பிரதிநிதியாக மனிதனை தேவன் உண்டாக்கி வைத்தார்.

**மனிதனது வீழ்ச்சியும் பின் விளைவுகளும்** (ஆதி. 3-5)

ஆதாமும் ஏவாளும் தங்களின் கீழ்ப்படியாமையின் பாவத்தினால் சாபத்தையும், மரணத்தையும் கொண்டு வந்துவிட்டனர். தேவன் அவர்களிருவரையும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே துரத்திவிட்டார்.

- சர்ப்பத்தின்மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு: (3:14,15) சகல நாட்டுமிருகங்களிலும், காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருக்கும் (3:14). ஸ்திரீயின் வித்துக்கும், சர்ப்பத்தின் வித்துக்கும் பகையுண்டாகும்; முடிவில் சர்ப்பத்தின் தலை நசுக்கப்படும். இது 4000 ஆண்டுகளுக்குப்பின் வெளிப்படும் மேசியாவாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது (3:15).
- ஸ்திரீயின்மேல் சொல்லப்பட்ட நியாயத்தீர்ப்பு: (3:16): நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி ஆண்டு கொள்ளுங்கள்' என்பது 1:28-ல், பாவம் செய்யுமுன்பு தேவன் கொடுத்த ஆசீர்வாதம். ஆனால் இப்பொழுதோ, ஆண்பெண் உறவில் வந்த மாற்றத்தைக் காண்கிறோம். அத்துடன் கர்ப்பவதியாயிருக்கும்போது அவளது வேதனை பெருகும்; வேதனையோடு பிள்ளை பெறுவாள். ஆண் பெண்ணின்மேல் ஆளுகை செய்வான்; இருவரும் சேர்ந்து சகல சிருஷ்டியின் மேலும் செலுத்தும் ஆளுகையிலும் மாற்றம் வந்தது.
- புருஷன்மேல் வந்த நியாயத்தீர்ப்பு: (3:17-19) தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் மனிதனைவிட்டு எடுத்துப்போடப்படவில்லை. ஆனால் அவற்றை நெற்றிவேர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டே அனுபவிக்கவேண்டும். ஏதேன் தோட்டத்து பராமரிப்பாளர்களாய் வைக்கப்பட்ட அவர்கள் இப்பொழுது அன்றாட

உணவுக்கும் வியர்வை சிந்தி கடின வேலை செய்யவேண்டும். அவன் நிமித்தம் சபிக்கப்பட்ட பூமி, முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; பிரயாசத்துக்குத்தக்க பலனும் கிடைக்காது.

**தோட்டத்தைவிட்டுத் துரத்தப்படல்:**

ஏன் துரத்தப்பட்டார்கள்? ஜீவ விருட்சத்தின் கனியை அவர்கள் புசித்து நித்தியமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பின்கீழ் பாவிகளாய் உயிரோடிராதபடிக்கே, தேவக் கிருபை அப்படிச் செய்தது.

**வீழ்ச்சிக்குப்பின் மனிதனின் வாழ்க்கை:**

வீழ்ச்சியுற்ற மனுக்குலம் இருபெரும் பிரிவுகளாக பிரிந்தது: கீழ்ப்படிகிற நீதி செய்யும் சந்ததியினர். கீழ்ப்படியாத அநீதத்தின் சந்ததியினர். **ஆபேலும், சேத்தும்** கீழ்ப்படிகிற சந்ததியினராயும், தேவனைத் தேடுகிறவர்களாயும் வந்தனர் (4:25,26). **காயினும் அவன் சந்ததியும்** கீழ்படியாதவர்களாயும், தேவனைத் தேடாத பக்தியற்ற சந்ததியாகவும் பிரிந்தனர். ஆதி.5-ம் அதிகாரத்தில் ஆதாமுக்குப்பின் வந்த சந்ததியினரின் வம்ச வரலாறு தரப்பட்டுள்ளது. தேவனோடு நல்லுறவுடன் நடப்பவர்களே மரணமாகிய நியாயத்தீர்ப்புக்குத் தப்புவார் என்பதை **ஏனோக்கு, நோவா** என்பவர்களின் மாதிரிகள் நமக்குக் கற்பிக்கின்றன (5:22-24; 6:9).

**ஜலப்பிரளயம்:**

நோவாகால மனுக்குலம் தேவனைத் தேடாமல் வாழ்ந்த கலகமும், கொடுமையும், சீர்கெட்டதுமான சந்ததி. எனவே அவர்கள்மேல் வெள்ளப்பெருக்கின் நியாயத்தீர்ப்பு வந்து முழு உலகத்தையும் அழித்தது. முழு உலகத்தையும் வெள்ளப்பெருக்கினால் அழித்த தேவன், நோவாவின் குடும்பத்தையும் அவர்களுடன் பேழையிலிருந்த 1,25,000-க்கும் அதிகமான இனங்களான அனைத்து ஜீவராசிகளையும் பாதுகாத்தார். அவர்கள் ஒருவருடமும், ஒருமாதமும், இருபது நாட்களும், பேழையிலிருந்தனர். உலகத்தை அழித்த பெருவெள்ளச் சரித்திரம், முழு உலகமும் அழிக்கப்பட்டது என்பதைவிட, தேவனோடு நடந்த உத்தமனும் நீதிமானுமாயிருந்த நோவாவை தேவன் இரட்சித்தார் என்பதைச் சொல்லுவதிலேயே கவனம் செலுத்துகிறது.

**ஜலப்பிரளயத்துக்குப்பின்:**

பேழையிலிருந்து வெளியே வந்த நோவாவையும் அவனது பிள்ளைகளையும் தேவன் ஆசீர்வதித்தார். நோவாவின் பிள்ளைகள் **சேம், காம், யாப்பேத்.** இவர்களில் சேம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான். சேம்-ன் சந்ததியில் தமது உலக இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றத் தேவன் திட்டம்கொண்டார் (9:26). சேம் குறித்து 10,11 அதிகாரங்களில் வாசிக்கிறோம். சேம்-ன் வம்சமும் இரண்டாகப்பிரிந்தது: **யொக்தான், பேலேகு.** யொக்தான் (10:29) என்பவனுடைய சந்ததியினர் (10:25-32) பாபேல் கோபுரத்தைக் கட்டினர். இது தேவனுக்கு விரோதமானக் கலகமாகக் கண்டது. ஆரம்பத்தில் ஆதாமும் ஏவாளும் துணிந்து செயல்பட்டதுபோல இவர்கள் தேவனில்லாமல் தாங்களே தங்களை நடத்திச் செல்லலாம் எனத் துணிவு கொண்டனர் (11:1-9). சேம்-ன் அடுத்த பிரிவாகிய பேலேகு-வின் (10:25; 11:16-26) சந்ததியில் **ஆபிரகாம்** வருகிறான். இந்த ஆபிரகாம் தேவனுடைய அழைப்புக்கும், வாக்குத்தத்தத்திற்கும் கீழ்ப்படிந்தான் என்று பார்க்கிறோம்.

**ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு** : (ஆதி.12-50).

தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் சரித்திரம் கோத்திரப் பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு என்பவர்களின் வாழ்க்கையுடன் தொடர்கிறதை இந்த வேதபகுதியில் பார்க்கிறோம்.

## ஆபிரகாமின் அழைப்பு:

ஆபிரகாமைத் தெரிந்துகொண்டு அவனை அழைத்தபோது மூன்று வாக்குத்தத்தங்களை தேவன் அவனுக்குத் தந்தார்.

- திரளான பிள்ளைகள்
- குடியிருக்க ஒரு தேசம்
- உலகளாவிய ஆசீர்வாதம் (இவை ஆவிக்குரிய நிலையில் ஆபிரகாமின் சந்ததியினராகிய நமக்குமுரியவைகளே!)

இவை உடனே நிறைவேறாவிட்டாலும், நிச்சயம் அவை கிடைக்கும் என தேவன் தொடர்ந்து வாக்குப்பண்ணினார் (அதி.15,17,22). ஆபிரகாமும் சாராளும் வயதுசென்றபோது, வாக்குத்தத்த நிறைவேறுதல் தாமதமானபோது, வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற தாங்களாகவே தங்களுக்குத் தென்பட்ட முறைகளைத் தெரிந்தெடுத்தனர். (எலியேசர் புத்திரனாகத் தத்தெடுக்கப்பட்டது (ஆதி.15); ஆகார் மூலம் பிறந்த இஸ்மவேல் (ஆதி.16)).

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஒருபோதும் பொய்த்துபோகாது; தாமதித்தாலும் நிச்சயம் நிறைவேறும்! அப்படியே சாராள் ஈசாக்கைப் பெற்றெடுத்தாள், (21:1). ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்; அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.

தேவனுடைய இரட்சிப்பின் திட்ட வாக்குத்தத்தங்கள் ஈசாக்குக்கும் (26:2-4), யாக்கோபுக்கும் (ஆதி.28, ஆதி.35), யோசேப்புக்கும் (48:1-6) மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. கானானில் பஞ்சம் வந்தபோது குடும்பத்தை பாதுகாக்க யோசேப்பு எகிப்துக்கு அனுப்பப்பட்டான். ஆதி.49-ம் அதிகாரத்தில் தனது சந்ததியின்மேல்வரும் ஆசீர்வாதங்களைத் தீர்க்கதரிசனமாக அறிவித்தான் யாக்கோபு. அவன் சந்ததியில் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற யூதா தெரிந்துகொள்ளப்பட்டான் (49:8-12).

ஆதியாகமத்தில் ஆரம்பிக்கும் **தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் சரித்திரம்** வேதாகமம் முழுவதிலும் நூலிழை போன்று இணைக்கப்பட்டிருப்பதை நம்மால் காண இயலும். கடைசியில், அவை வெளிப்படுத்தின விசேஷத்தில் அவற்றின் நிறைவேறுதலைக் காண்கின்றன எனக் காண்கிறோம்.

| **ஆதியாகமத்தில்** | **வெளிப்படுத்தின விசேஷத்தில்** |
|---|---|
| ● முதலாவது வானமும் பூமியும் | ● புதிய வானமும் பூமியும் |
| ● முதலாவது தோட்டம்; பாதுகாக்கப்பட்ட ஜீவவிருட்சம் | ● புதிய நகரமும், ஜீவவிருட்சமும் எல்லாருடைய பயன்பாட்டுக்கும் வருதல் |
| ● முதலாவது கல்யாணம் | ● கடைசி கல்யாணம் (ஆட்டுக்குட்டியானவரின்) |
| ● பாவம் செய்யும்படி சாத்தான் ஏவாளை ஏவினான் | ● சாத்தான் அக்கினிக் கடலில் தள்ளப்பட்டான் |
| ● மரணம் அறிமுகப்படுத்தப்பட்டது | ● இனி மரணமில்லை |
| ● பாபேல் (பாபிலோன்) கட்டப்பட்டது | ● பாபிலோன் அழிக்கப்பட்டது |
| ● மீட்பர் வாக்குப்பண்ணப்பட்டார் | ● மீட்பர் ஆட்சிசெய்கிறார் |

இன்னும் ஏராளம் ஒப்பீடுகளை இவ்விரு புத்தகங்களுக்கும் நாம் சொல்ல முடியும். எனினும், தேவனுடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தை விளங்கிக்கொள்ள ஆதியாகமம் மிக முக்கியமான புத்தகம் என்பதை நாம் காண்கிறோம்.



# பெண்களும் நற்கிரியைகளும்


## திருமதி. எப்சிபா எட்வின்

பிளஸ்சிங் ஏஜி சர்ச், தென்காசி


சிறுமைப்பட்டவர்களுக்குத் தன் கையைத் திறந்து ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள் (நீதி. 31:20).

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளே!

இம்மாத இதழின் மூலம் உங்களை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். பெண்களாகிய நம்மையும் தேவன் தமது ராஜ்ய மகிமைக்காக தெரிந்துகொண்டதற்காக தேவாதி தேவனை துதிக்கிறேன். நாம் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். வேதாகமப் பெண்களையும், நம் தலைமுறையில் அநேகப் பெண்களையும் தேவன் நற்கிரியைகளைச் செய்கிறவர்களாக உருவாக்கியிருக்கிறார். நாமும் தாராளமாய் பரிசுத்தவான்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் உதவி செய்யும்படி தேவன் எதிர்பார்க்கிறார்.

### ஈடித்தும் ஈகையும்

Hidden Art என்ற புத்தகத்தில் ஈடித் என்ற பெண் தேவ அன்பை மற்றவர்களிடம் பகிர்ந்த விதத்தை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஈடித்தின் வீட்டுப் பின்வாசலுக்கு பிச்சைக்காரர்கள் எப்போதாவது வருவதுண்டு. அவர்கள் ஈடித்திடம், அம்மா எனக்கு ஒரு காபி கொடுப்பீர்களா?, அதோடு சேர்த்து ரொட்டித் துண்டுகள் இருந்தாலும் தயவுசெய்து கொடுங்கள் என்று கேட்டார்கள். ஈடித் அவர்களை அன்போடு ஏற்றுக்கொண்டு, சற்றுநேரம் காத்திருக்கச் சொல்லுவாள். பின்பு ஒரு ராஜா தன் வீட்டுக்கு வந்தால், அவருக்கு எவ்வளவு மேன்மையான சாப்பாட்டு வகைகளைக் கொடுப்பாளோ, அதைப்போல ஒரு தட்டு நிறைய கொண்டு வருவாள்.

அதில் சூடான ஒரு கப் சூப்பும் இருக்கும். நேர்த்தியாக தயாரிக்கப்பட்டு, அழகாக வெட்டப்பட்ட ரொட்டிகள், கண்கவர் விதத்தில் அழகுபடுத்தப்பட்டு அந்தத் தட்டில் இருக்கும். இரவு நேரத்தில் அவர்கள் வந்திருந்தால், கூடவே அந்தத் தட்டில் ஒரு மெழுகுவர்த்தியும் இருக்கும்.

அந்தத் தட்டைப் பார்த்தவுடனே, அந்தப் பிச்சைக்காரர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, “இது எனக்கா” என்று கேட்பதுண்டு. ஆம் என்று சொல்லிவிட்டு, குடிக்க காபி ஒரு நிமிடத்தில் உங்களுக்கு தயாராகிவிடும் என்றும் சொல்லுவாள். காபியைக் கொடுத்துவிட்டு, இந்த யோவான் சுவிசேஷப் புத்தகமும் உங்களுக்குத் தான். இதை எடுத்துக்கொண்டு போய் வாசியுங்கள். இது உங்கள் வாழ்வுக்கு மிகவும் பிரயோஜனமாய் இருக்கும் என்றும் சொல்லுவாள். அவர்கள் வயிராறச் சாப்பிட்டு விட்டு தேவ வார்த்தைகளையும் பெற்று செல்வார்கள். அவளுடைய சமையலறையில் "Food is God's love made edible" என்ற வாசகத்தை வைத்திருப்பாள்.

ஆம், தேவையுள்ளவர்களின் தேவைகளை சந்திப்பதின் மூலமாகவும் நாம் தேவ ராஜ்யத்தை இவ்வுலகிலே ஸ்தாபிக்க முடியும். அநேகரை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த முடியும்.

ஆகவே, பெண்களாகிய நாம் சிறுமைப்பட்டவர்களுக்கு உற்சாகமாய் நம் கரங்களைத் திறக்க வேண்டும். விதவைகளுக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும் நாம் உதவுவதை தேவன் விரும்புகிறார். அப்படிச் செய்தால் நமக்குரிய பிரதிபலன் நமக்கு நிச்சயம் உண்டு. நம் பிள்ளைகளும் அதன் மூலம் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

### பிடி அரிசியும் மிசோரம் மொழி வேதாகமமும்

இந்தியாவில் மிசோரம் மாநிலத்தில் ஒரு குறிப்பிட்ட சபையை சேர்ந்த பெண்கள் தேவனுக்காக கொடுத்தது அற்பமான காரியம்தான் என்றாலும், அதன் பலன் விவரிக்க முடியாததாய் மாறினது. ஒவ்வொரு பெண்ணும் தன் குடும்பத்தாருக்கு உணவு ஆயத்தப்படுத்த அரிசியை எடுக்கும்போது ஒரு கைப்பிடி நிறைய அரிசியை எடுத்து சேர்த்து வைப்பது வழக்கம். ஞாயிற்றுக்கிழமை சபைக்கு வரும்போது அந்தப்பிடி அரிசியை ஒரு பையில் போட்டு,காணிக்கையாகக் கொண்டு வந்து கொடுப்பார்கள். இவ்விதமாக எல்லா சகோதரிகளும் கொடுத்த பிடி அரிசியை விற்று, அதில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு மிஷனரி தளத்தில் தேவைப்படும் திட்டங்களுக்கு பயன்படுத்துவார்கள். அதில் ஒரு திட்டமாக மிஷனரி தளத்தில் நடைபெற்ற வேதாகம மொழிபெயர்ப்பு பணிக்காக ஒரு கம்ப்யூட்டர் வாங்கிக்கொடுத்தனர்.

மிசோ மொழியில் வேதாகமம் மொழிபெயர்ப்பு செய்து அச்சிட அந்த கம்ப்யூட்டர்தான் பயன்படுத்தப்பட்டது. அவர்கள் ஒவ்வொரு நாளும் எடுத்து வைத்த பிடி அரிசி அவர்களுக்குத் தங்கள் தாய் மொழியில் வேதாகமத்தைப் பெற்றுத் தந்தது.

### தொற்காளின் நற்கிரியை

அப்போஸ்தலர் நடபடி புத்தகத்தின் ஒன்பதாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள தொற்காளின் நற்கிரியைகள் பிற்காலத்தில் அனைத்துப் பெண்களுக்கும் ஒரு நல்ல மாதிரியாக இருக்கும்படிக்கே பரிசுத்த ஆவியானவர் அதை எழுதி வைத்துள்ளார்.

தொற்காள் தன் பணத்தை விதவைகளுக்கு வஸ்திரம் செய்து கொடுக்க பயன்படுத்தினாள். அந்தப் பகுதியில் வாழ்ந்த பரிசுத்தவான்களுக்கும், விதவைகளுக்கும் அங்கிகளையும், வஸ்திரங்களையும் அவள் தைத்துக்கொடுத்தாள். அங்கிருந்த விதவைகளில் அநேகர் தொற்காள் தங்களுக்குக் கொடுத்த உடைகளைத்தான் உடுத்தியிருந்தனர்.

அவள் செய்த நற்கிரியைகளை தேவன் நினைவுகூர்ந்ததால், அவள் மரித்த பின்பும் உயிரோடு எழுப்பப்பட்டாள்.

பிரியமான சகோதரிகளே, நம்முடைய அன்புள்ள பிரயாசங்களை தேவன் ஒருபோதும் மறக்கமாட்டார். நாம் உதாரத்துவமாய் ஊழியங்களுக்கும், ஊழியர்களுக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும் உதவி செய்தால் தேவன் நம்மையும், நம் பிள்ளைகளையும் பல மடங்கு ஆசீர்வதிப்பார். ஆகவே, சிறுமைப்பட்டவர்களுக்கும், ஏழைகளுக்கும் உற்சாகமாய் உதவி செய்ய முன்வருவோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து நம்மில் நற்கிரியைகளைப் பெருகச் செய்வாராக.




>> உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவிசெய்யும் தின தியான புத்தகங்கள்...
>> உங்கள் குடும்ப ஜெபத்தில் வாசிக்க வேண்டிய ஒரு புத்தகம்...
>> வாலிபர்களும் விரும்பி வாசிக்கும் ஒரு தின தியான நூல்...
>> ஊழியம் செய்பவர்களுக்கும், பராமரிப்புக் குழுக்கள் நடத்துகிறவர்களுக்கும் மிகவும் பிரயோஜனமான பிரசங்க உதாரணங்கள் அடங்கிய அருமையான ஆவிக்குரிய புத்தகம்...


## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

### நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி


**Rev. Jerry Daniel**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, Trichy - 620 001
Cell : 94434 15484



REGULAR FULL TIME COURSES

முழு நேர பயிற்சி வகுப்புகள்

முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும் சகோதரர்களுக்கு

போதனை மொழி: தமிழ்

- இறையியல் பட்டப்படிப்பு
  (Bachelor of Theology) (ATA)
  தகுதி: 12ம் வகுப்பு காலம்: 3 ஆண்டுகள்
- இறையியல் டிப்ளோமா
  (Diploma in Theology) (ATA)
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்
- இறையியல் சான்றிதழ்
  (Certificate in Theology)
  தகுதி: 10ம் வகுப்புக்கு கீழ் காலம்: 2ஆண்டுகள்

முறையான வேதாகம கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

ADMISSION OPEN

EVENING PART TIME COURSES

பகுதி நேர பயிற்சி வகுப்புகள்

For Both Men and Women

Classes: Monday, Thursday & Friday | 6:30 – 8:30 Pm

போதனை மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்

- MASTER OF ARTS IN CHRISTIAN MINISTRY (ATA)
  Eligibility: Any Degree | Duration: Two Years
  Medium of Instruction: English
- கிறிஸ்தவ ஊழியம் – முதுகலை (ATA)
  தகுதி: பட்டபடிப்பு காலம்: 2 ஆண்டுகள்
- கிறிஸ்தவ ஊழியம் – டிப்ளோமா
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்

For further information and application form, please contact
Rev. M. Sampath (Principal, MABC)
Mobile : +91 - 94442 87322

MADRAS ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE

No. 191 (New No. 6), Anna Salai,
Little Mount, Chennai – 600 015, TN.
Phone: 044 – 2235 1646 | 2235 3100
Email: mabc_edu@yahoo.com



# மதியாதவர் தலைவாசல் மிதிக்க வேண்டாம்

**Rev. J. தேவதாசன் கலையரசன்**
மூத்த போதகர், பெத்தேல் ஏஜி. சர்ச், குளத்தூர்

சமீப நாட்களாக நற்செய்தி ஊழியம் செய்பவர்கள் தாக்கப்படுவதும் வழக்குகளைச் சந்திப்பதும் அதிகமாகிக்கொண்டே வருகிறது. இப்பிரச்சனைகளைக் கையாளுவதில் சபைகள் இருவேறு அணுகுமுறைகளைக் கையாளுகின்றன. ஒன்று இந்நாட்களுக்குத் தகுந்தாற்போல் சுவிசேஷ ஊழிய அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதாகும். மற்றொரு வாதம் நமக்கு பேச்சுரிமை, பரப்புரிமை உண்டு என்றும் ஆகவே தைரியமாக இதை எதிர்கொள்ள வேண்டும் என்பதாகும்.

ஒரு சில போதகர்கள் பிறவியிலேயே துணிச்சல் உள்ளவர்கள், அவர்கள் சொல்வது, 'வீரத்துடன் எதிர்ப்புள்ள இடங்களிலும் சுவிசேஷத்தை அறிவிப்பது அவசியம் என்கிறார்கள். பொதுமக்களின் எதிர்ப்பையும், அவர்களின் மத அடையாளங்களை கட்டாயப்படுத்தி பூசச்செய்வதையும், மகிழ்ச்சியோடு இரத்தசாட்சிக்கு இணையாக கருதி, பொது ஊடகங்களிலும் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒருமுறை அடிப்பட்டாலும் திரும்ப அதே ஊர் செல்வேன் கர்த்தருக்காக எதையும் செய்வேன் என்று பேசுவதைக் கேட்டு கிறிஸ்தவ இளைஞர்கள் எழுச்சியுறுகிறார்கள்.

வேறு சில போதகர்கள் எதிர்ப்புள்ள இடங்கள், எதிர்வாதம் பேசும் மக்கள், மட்டுமே இலக்கு என்பது ஞானமுள்ள செயலல்ல என்கிறார்கள்.

எதுசரி? நமக்கு உரிமையிருக்கிறது என்று எந்த இடத்திற்கும் சென்று சுவிசேஷம் சொல்வதா? அல்லது ஏற்றுக்கொள்கிற மக்களைக் கண்டுபிடித்து சுவிசேஷம் சொல்வதா? எது சரி? இன்றைய போதகர்கள் எதை நம்புகிறார்கள் என்பதை வைத்து இதுதான் சரி என்று சொல்ல முடியாதே. வேதாகம அடிப்படையில் எது சரி என்ற முடிவுக்கு வருவதுதானே நியாயம்!

## I. இயேசுகிறிஸ்துவின் அணுகுமுறை

இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பாருங்கள், தேவையுள்ள மக்களிடமே அதாவது விரும்பிக் கேட்டவர்களிடமே நற்செய்தி கூறினார். எதிர்வாதத்தில் அதிக கவனம் செலுத்தவில்லை. சொல்லவேண்டிய செய்தியை எடுத்துச் செய்வதையே குறிக்கோளாக கொண்டிருந்தார்கள்.

1. திரளான மக்களுக்கு நேரம் எடுத்து உபதேசித்தார், அவர்கள் யாரென்றால், மேய்ப்பனில்லாத ஆடுகளும், தொய்ந்துபோன ஜனங்களுமே (மத்.9;:36-37) தேவையான மக்கள் பெரும்பாலும் எதிர்ப்பு தெரிவிப்பதில்லை. (Need based Evangelism approach)
2. பெரும்கூட்டத்திலும் வாஞ்சையோடு பார்க்க ஆசைப்பட்ட, சகேயுவிடம் மட்டுமே தமது நேரத்தைச் செலவழித்தார் (லூக்கா 19:3-10).

3. வேத வசனத்தில் தாகம் கொண்ட மரியாளிடம் பேசிக் கொண்டிருந்தார் (லூக்கா 10:39-42).

4. உள்நோக்கத்தோடு, வேறு ஆசைகளோடு, இருந்த மக்கள் வாஞ்சையோடு அவரைத் தேடினதாக நாடகமாடினபோது.... அவர்களைச் சாமார்த்தியமாக ஒதுக்கிவிட்டார் (யோவான் 6:15).

5. இந்த இடத்தைவிட்டு அகன்றுபோம் என்று சொன்னபோது எனக்கு உரிமையுண்டு என அவர்களிடம் வாதிடாமல் அமைதலாக கடந்து சென்றார் (மாற்கு 5:17,18).

6. சிலுவை மரணத்தின்போது கூட, வாதம் செய்த கள்ளனிடம் பேசி தனது பொன்னான நேரத்தை இழந்துவிடாமல் தனது வார்த்தையை நம்பின கள்ளனிடமே பேசினார் (லூக்கா 23:39-43).

7. அதே சமயம் எதிர்வாதம் செய்த மக்களிடம் இருந்து ஓடி ஒளிந்து விடவில்லை. அவர்களிடம் சத்தியத்தைப் பேச நேரம் எடுக்கவில்லை என்பதை மட்டும் நினைவில் வையுங்கள்.

## II. ஆதிச்சபை எதிர்ப்புகளை சந்தித்த விதம்

1. இப்போதும் கர்த்தாவே ஜனங்களின் பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனித்து, அற்புத அடையாளங்கள் நடக்கும்படி செய்து..... உம்முடைய வசனத்தை முழுதைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் என்றார்கள். அப்.4:2,9,30 பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டு தைரியமாய், சொன்னார்கள் (31) அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது (33)

இன்றைய தேவை விவாதம் செய்வதல்ல, உரிமைக்காக போராடுவதல்ல கூடி ஜெபித்தலும், பரிசுத்த ஆவியில் நிரப்பப்படுவதுமேயாகும் (31).

2. ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தார்கள் (அப்.8:1-4;11:19). அதாவது அறிந்தவர்களுக்கு முதலாவது அறிவித்து பின்பே அறியாத புறஜாதியாரிடம் சென்றார்கள். அறிந்த மக்களிடம் குறைவான எதிர்ப்பே இருக்கும்.

- முன்பு இயேசுகிறிஸ்து தம் சீஷர்களுக்கு முதலாவது இஸ்ரவேலர் வீட்டாரிடம் சொல்லுங்கள் என்று சொன்னதற்கும் இப்படி ஒரு காரணமும் இருந்திருக்கக்கூடும் (மத். 10:5,6).
- பவுல் பர்னபாவின் முதல் மிஷனரி பிரயாணமும் பர்னபாவின் சொந்த ஊருக்குச் செல்வதில்தானே ஆரம்பிக்கிறது (அப். 4:36, 13:4).

3. முதலாவது அறிந்தவர்களிடம் சுவிசேஷம் கூற நமது மக்கள் பழக வேண்டும், எதிர்ப்புமின்றி, தர்க்கமின்றி சொல்வதால் சொல்லவேண்டிய சுவிசேஷத்தை முழுமையாகச் சொல்ல அவர்களுக்கு சிறந்த பயிற்சி உண்டாகும். இதனால் விவேகத்தோடும், துணிவோடும், பரிசுத்தாவியின் நிறைவோடும் சுவிசேஷம் அறிவிப்பதற்கு பழகுவார்கள். பின்பு எதிர்ப்புள்ள இடங்களை கையாளவும் ஞானம் பெறுவார்கள்.

4. எதிர்ப்பைக் கண்டு ஆதிச்சபை பின்தங்கிவிடவில்லை. அதேசமயம் தங்கள் மதியீனத்தினால் எதிர்ப்பை ஒருபோதும் அவர்கள் ஏற்படுத்தவுமில்லை. மாறாக எதிர்ப்பு எழுந்தபோது எதிர்ப்பின் மத்தியிலும் தீவிரமாக களப்பணியாற்றும் வழிமுறைகளைக் கண்டுபிடித்திருந்தார்கள்.

## III.சபையாருக்கு போதிக்க வேண்டிய சில குறிப்புகள்

1. எந்தக்காலத்திலும் சுவிசேஷம் அறிவிப்பது என்பது கட்டாயம். அதேசமயம் அறிவிக்கும் முறைகளில் மாற்றம் செய்வது தவறல்ல.
2. நமது நாட்டில் இன்றைய அரசியல் சாசனம் மாற்றப்படாத வரை (19வது மற்றும் 25வது சரத்து) சுவிசேஷத்தைக் குறித்து பேசுவதற்கோ, பரப்புவதற்கோ, சட்டப்படி உரிமை உண்டு, குற்றமல்ல.
3. ஆயினும் நயங்காட்டிப் பேசுவதோ, பயங்காட்டி பேசுவதோ, பிறமத நம்பிக்கைகளை இழித்துப் பேசுவதோ சட்டப்படி குற்றம். குற்றம் நிரூபிக்கப்பட்டவருக்கு குறைந்தபட்சம் ஈராண்டு சிறைவாசம் கொடுக்க முடியும்.
4. பவுல் அத்தேனே பட்டணத்திற்கு கோயிலுக்குள் சென்றே சுவிசேஷ ஊழியம் செய்ததைப் பாருங்கள். ஆனால் பழித்துப் பேசவில்லை. இதைக் கற்றுக் கொள்ளலாமே (அப். 17:22-34).
5. எங்களுக்குச் சொல்லமாட்டீர்களா என்று கதறும் எண்ணற்றவர்கள் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள் (அப்.16:9;சங்.4:6). அப்படியிருக்க கேட்கவிருப்பமற்ற, வெறுப்புற்ற மக்களிடம் தான் பேசவேண்டுமா! சிந்திப்பீர்.
6. ஒரு வீட்டிற்குள் நுழைந்தவுடன் அங்குள்ள மத அடையாளங்களை, பிசாசின் கட்டுகளை, இருளை, வெளிப்பாடாக பேசாதிருங்கள். மாறாக அவர்களுக்குச் சமாதானம் உண்டாகட்டும் என்று முதலாவது சொல்லுங்கள். இது தான் இயேசுவின் முறை (லூக். 10:5).
7. பன்றிகளுக்கு முன் முத்துப் போடுவது தேவையற்ற வேலை (மத்தேயு 7:6). நம் ஊரில் சொல்வது போல 'மதியாதோர் தலைவாசல் மிதிக்க வேண்டாம்'.
8. ஆம் ஏற்றுக்கொள்வோரிடமே சொல்வோம். பாதிப்பிரச்சனைகள் அகலும். தற்போது நடப்பது போல தலைகுனியும் நிலை ஏற்படாது.

## இறுதியாக

எதிரிப்பை உருவாக்கும் அணுகுமுறை தான் தவறு. நமது மதியீனத்தினால் வரும் எதிர்ப்பைத் தவிர்ப்போம். அதேசமயம் சுவிசேஷத்திற்கு நிச்சயம் எதிர்ப்பு உண்டு (லூக்.10:3). எதிர்ப்பு வந்தால் கோழையாக புறமுதுகுகாட்டி ஓடவும் வேண்டாம். கடைசிக்கால எழுப்புதல் சுவிசேஷ ஊழியத்தினால் ஏற்படும் எழுப்புதலே. ஆதிச்சபை எழுப்புதல் சபைகள் மூலம் வந்தது. தனி நபர் மூலம் அல்ல. புதிய சபைகளை எழுப்பவே ஆதிச்சபை எழுப்புதல் பயன்பட்டது. இதை விசுவாசிப்போம், தேசத்தை சுதந்தரிப்போம். (ஏசாயா 2:2,3; அப். 2:47, 9:31).

## இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் ஆசீர்வாதங்கள்



1. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு மீட்பும் பாவ மன்னிப்பும் கிடைக்கிறது (1 பேதுரு 1:18, 19; கொலோ. 1:14;எபே. 1:7; எபி. 9:12).
2. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு சமீபமாகிறோம் (எபே. 2:11-13).
3. இயேசுவின் இரத்தம் நம்மை பாவங்களறக் கழுவி சுத்திகரிக்கிறது (வெளி.1:5; 1 யோவான் 1:7).
4. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கப்படுகிறோம்(வெளி. 1:5).
5. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு சமாதானம் உண்டாகிறது (கொலோ. 1: 20).
6. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் சாத்தானை ஜெயிக்கிறோம் (வெளி. 12 : 11).
7. இயேசுவின் இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனச்சாட்சியை செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கிறது (எபி. 9 : 14).
8. இயேசுவின் இரத்தம் தேவனுடைய பரிசுத்த சந்நிதிக்குள் பிரவேசிப்பதற்கு நமக்கு தைரியத்தை கொடுக்கிறது (எபி. 10:19, 20).
9. இயேசுவின் நித்திய உடன்படிக்கையின் இரத்தம் நம்மை சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குகிறது (எபி.13:20, 21).
10. இயேசுவின் இரத்தம் நம்மை நீதிமான்களாக மாற்றி, தேவனுடைய கோபாக்கினைக்கு நீக்கி நம்மை இரட்சிக்கிறது (ரோமர் 5:9).

## சிலுவையில் மலர்ந்த 7 பூக்கள்

### இயேசு சிலுவையில் பேசின ஏழு வார்த்தைகள்

| | |
|---|---|
| 1. மன்னிப்பு | - லூக்கா 23 : 34 |
| 2. இரட்சிப்பு | - லூக்கா 23 : 43 |
| 3. அரவணைப்பு (அன்பு) | - யோவான் 19 : 26, 27 |
| 4. தத்தளிப்பு | - மத்தேயு 27 : 46 |
| 5. தவிப்பு | - யோவான் 19 : 28 |
| 6. பூரிப்பு | - யோவான் 19 : 30 |
| 7. ஒப்புவிப்பு | - லூக்கா 23 : 46 |

# Antioch Biblical Seminary & College

Affiliated with Tamil District Council of SIAG

Accredited by Asia Theological Association (ATA)

## M.Th. Program : *A Non - Residential* Course in Christian Theology

***Wanted : Residential Faculty with M.Th./Ph.D. (ATA / Serampore) in any discipline. (North Indians Preferred)***

| Courses | Duration | Qualification |
|---|---|---|
| B.Th. | 3 Years | 12th Pass |
| M.Div. | 2/3 Years | B.Th (ATA) / any University Degree |
| Dip. Th. | 2 Years | 10th Pass |





## College Reopens on the 2nd of June 2021

The Registrar

**ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE**

Post Box -05, Pondicherry University, Pillaichavady, Mathur Road, Puducherry - 605 014
Office Phone : (0413) 2970521/22/23 | Cell : 098652 09821 | EMail: abscollege@gmail.com
Website : www.antioch.in



# அழைப்பை அடுத்து....
## (After Call)


**Rev. R. நெல்சன் ஞானகுமார்**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.


ஊழிய அழைப்பின் நேரம் வேறு, முழு நேரமாய் ஊழியத்தை செய்ய ஆரம்பிக்கும் நேரம் வேறு. எனவே அதற்கான நேரம் வரும் வரை பொறுமையாய் காத்திருந்து வல்லமையான ஊழியத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்துங்கள். உங்களை ஆயத்தப்படுத்தி வல்லமையான ஊழியம் செய்வதற்கு கீழ்க்கண்ட ஆலோசனைகள் மிக பிரயோஜனமாயிருக்கும்.

**1. அவசரப்பட வேண்டாம்**

சிலர் தங்களிடமிருக்கும் சில திறமைகள், கிருபைகள், வரங்களை வைத்து ஊழியத்திற்கு எல்லா தகுதியையும் பெற்றுவிட்டதாக கருதி படிப்பை, வேலையை நிறுத்திவிட்டு ஊழியத்திற்கு வந்து விடுகிறார்கள். அப்படி வந்து பின்வாங்கிப் போனவர்கள் அநேகர். எலியா எடுத்துக்கொள்ளப்படும் வரை எலிசா அவரைப் பின்பற்றினான். சால்வை தானாகவே எலிசாவின் மேல் விழுந்தது. எலியாவின் தோளிலிருந்து எடுத்துக்கொள்ளவில்லை. (2 இராஜா.2:13). எனவே வேளை வரும் வரை பொறுமையாய் காத்திருங்கள். மோசே 40 வருடம் காத்திருக்க வேண்டியதாயிற்று. யோசேப்பு 13 வருடம் காத்திருக்க வேண்டியதாயிற்று. பிரசங்கம்பண்ணும் திறமை இருப்பதோ, பாடல் ஆராதனை நடத்தும் திறமை இருப்பதோ முழு நேர ஊழியமாகாது. இன்னும் பல காரியங்கள் ஊழியத்தில் இருக்கிறது. ஆரம்பத்திலே துரிதமாகக் கிடைத்த சுதந்திரம் முடிவிலே ஆசீர்வாதம் பெறாது (நீதி.20:21).

**2. அதிக தாமதமும் வேண்டாம்**

சிலர் சரியான நேரத்தில் தீர்மானம் எடுக்காமல் தாமதித்து விடுவார்கள். வயது அதிகமாகி, ஒரு வேலைக்கு சேர்ந்து சம்பாதிக்கப் பழகிவிடுவார்கள், திருமணமும் ஒழுங்கு செய்ய வேண்டிய சூழ்நிலை வந்துவிடும். பின்பு முழு நேர ஊழியத்திற்கு வருவதற்கு யோசிப்பார்கள். எனவே அதிக காலதாமதம் செய்யாமல் சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுங்கள். லோத்துவும் அவன் குடும்பத்தாரும் தாமதித்தார்கள். எனவே ஆண்டவர் அவர்கள் கையைப் பிடித்து வெளியே கொண்டுபோய் விட வேண்டியதாயிற்று (ஆதி.19:16). சிலர் எதையெடுத்தாலும் தோல்வி, பிரச்சனைக்கு மேல் பிரச்சனை என்ற நிலை வந்தவுடன் தான் ஊழியத்திற்கு அர்ப்பணிப்பார்கள். நீங்கள் அப்படியிராமல் சரியான நேரத்தில் தீர்மானம் எடுங்கள்.

**3. தவறான நோக்கமும் வேண்டாம்**

பணம் சம்பாதிப்பதற்காக, புகழ் பெறுவதற்காக, பிறருடைய மதிப்பை பெறுவதற்காக, வேறு வேலை கிடைக்காததினால் ஊழியத்தையாவது செய்வோம் என்ற தவறான நோக்கங்களுக்காக ஊழியத்திற்கு வரவே கூடாது. கேயாசி பணத்திற்காக நாகமானை தேடிப்போனான், குஷ்டரோகியாக மாறிப் போனான். (2 இராஜா.5:20) ஊழியத்திற்கு போனால் பணம் கிடைக்கும்; ஆனால் ஒருபோதும் பணத்திற்காக ஊழியத்திற்கு போகக்கூடாது

**4. தரிசனத்தைத் தெளிவுபடுத்துங்கள்** (ஆபகூக் 2:2,3)

**தரிசனம் என்றால் என்ன?**

உங்களைக் கொண்டு கர்த்தர் என்னவெல்லாம் செய்ய விரும்புகிறாரோ, அதை உங்களைக் கொண்டே செய்து நிறைவேற்றுவதற்கு, உங்களுக்குள் ஆண்டவர் தரும் ஆசையே தரிசனமாகும்.

ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்தாலும், எந்த விதமான ஊழியத்தை செய்வது, எங்கே ஊழியம் செய்வது, எப்போது ஊழியத்திற்குள் பிரவேசிப்பது என்பன போன்ற காரியங்களை தேவ சமுகத்தில் காத்திருந்து தெளிவுபடுத்துங்கள். தேவைப்படுமானால் அவ்வப்போது உபவாசத்தோடு ஜெபியுங்கள். ஊழியங்களிலே பல வகை உண்டு உதாரணமாக மேய்ப்பனின் ஊழியம், சுவிசேஷ ஊழியம், தீர்க்கதரிசன ஊழியம், அப்போஸ்தல ஊழியம், போதக ஊழியம், மிஷனரி ஊழியம், வாலிபர் மற்றும் சிறுவர் ஊழியம்..... போன்ற பல ஊழியங்களில் உங்களைக் குறித்த தேவ திட்டம் என்ன என்பதை உறுதிப்படுத்துங்கள்.

கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன் (பிலி. 3:12). உங்களைக் கொண்டு ஆண்டவர் என்ன செய்ய விரும்புகிறாரோ அதைத்தான் நீங்கள் வெற்றியாய் செய்ய முடியும். அநேகர் தங்களைக் குறித்த தேவ திட்டம் அறியாமலே ஏதோ ஒரு ஊழியம் செய்து தங்கள் வாழ்க்கையையும் ஓடி முடித்து விடுகிறார்கள்.

### 5. உங்கள் போதகருக்கு ஊழியம் செய்யுங்கள்

**எலிசா** (1 இராஜா. 19:21), **யோசுவா** (யோசுவா 1:1; 24:29)

உங்கள் போதகர் உங்களைவிட கல்வியறிவு குறைவானவராக, திறமை குறைவானவராக இருக்கலாம். சில நேரங்களில் உங்களிடம் இருக்கும் திறமையை, கிருபையைப் பார்த்து விசுவாசிகள், உங்கள் போதகரைவிட உங்களை அதிகமாய் பாராட்டலாம். ஆனாலும் உங்கள் போதகர் தேவனால் அபிஷேகம் பெற்றவர், உங்களை நடத்தும்படி நியமிக்கப்பட்டவர். எனவே அவரை அலட்சியப்படுத்தக்கூடாது. அவரை வேதனைப்படுத்தும்படி நடந்துகொள்ளக் கூடாது. போதகரைக் குறித்து தவறான செய்தியை பரப்புவது, சபையிலிருந்து ஆத்துமாக்களை வயப்படுத்தி தனி சபை ஆரம்பிப்பது போன்ற சாத்தானின் வேலையை செய்ய வேண்டாம். உங்களை அழைத்த ஆண்டவர் உங்களுக்கென ஒரு சிறப்பு ஊழியத்தை வைத்திருக்கிறார்.

நீங்கள் ஊழியத்திற்குள் பிரவேசிக்கும் வரை உங்கள் போதகரின் கீழ் இருந்து அவர் சொல்லும் வேலை எதுவானாலும் செய்யுங்கள். பாடல் பாடுவது, ஜெபம் நடத்துவது, பிரசங்கம்பண்ணுவது மட்டுமல்ல.. இன்னும் பல வேலைகளிலும் (சுத்தம் பண்ணுதல், வங்கி வேலை, ஒழுங்குபடுத்துதல்.....) உங்களுக்கு அனுபவம் தேவை. எனவே எந்த வேலையானாலும் முகங்கோணாமல் செய்யுங்கள் (மத்தேயு 10:41,42).

### 6. கொடுக்கப்பட்ட பொறுப்பில் உண்மையாயிருங்கள்

....உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்... (மத்தேயு 25:23).

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்....(நீதி. 28:20). தற்சமயம் உங்கள் சபையில் கொடுக்கப்படுகிற பொறுப்பு எதுவோ அதை.....

- சந்தோஷமாய் செய்யுங்கள்.
- உண்மையாய் செய்யுங்கள்.
- நேர்த்தியாய் செய்யுங்கள் (பிரசங்கி 9:10).

போதகர் கண்களுக்கு மறைத்து விடலாம். ஆனால் ஆண்டவரின் கண்களுக்கு மறைத்துவிட முடியாது. எனவே உங்களை நம்பி ஒரு வேலைக் கொடுக்கப்படுமானால், அதை எப்பாடுபட்டாகிலும் நேர்த்தியாய் செய்திடுங்கள். சில தியாகங்களைப் பண்ண தயங்காதிருங்கள். (தூக்கம், சாப்பாடு, அலைச்சல்...)

### 7. ஜெபம், வேத வாசிப்பில் நேரத்தை முதலீடு செய்யுங்கள்

ஜெபம், வேதம் இதுதான் ஊழியத்தின் வெற்றிக்கு திறவுகோல்கள். உங்களுக்கு எந்த திறமையும் இல்லாவிட்டாலும் இவைகள் இருந்தால் வெற்றி பெற்று விடலாம். ஆனால் எல்லா திறமையும் இருந்தும் இவைகள் இல்லாவிட்டால் செல்லாக்காசாக மாறிவிடுவீர்கள். எனவே உங்களுக்கு இருக்கும் திறமைகளோடு ஜெபமும், வேதமும் இருந்தால் பிரயோஜனமுள்ள பாத்திரமாக இருப்பீர்கள். வாரம் ஒரு நாள் உபவாசித்து ஜெபிப்பது அவசியம். சபையில் ஜெப நேரங்களிலெல்லாம் கலந்துகொள்ளுங்கள். அவ்வப்போது நாட்களை விசேஷித்துக் கொண்டு உபவாசத்தோடு ஜெபியுங்கள். வரங்களுக்காக, கிருபைகளுக்காக, தரிசனத் தெளிவுக்காக, வழிநடத்துதலுக்காக ஜெபியுங்கள்.

இப்பொழுது நீங்கள் ஜெபம்பண்ணுவதை, வேதம் வாசிப்பதை வைத்து உங்கள் எதிர்காலத்தை நிர்ணயித்து விடலாம். உங்களுக்கு பெலனிருக்கும், நேரம் அதிகம் கிடைக்கும். இந்த நாட்களில் தான் அதிகம் உபவாசிக்க, ஜெபிக்க முடியும். வயதாகும்போது பெலன் குறைந்துவிடும், வேலை அதிகமாகிவிடும். எனவே காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (லூக்கா 6:12; 5:16; மல்கியா 2:7; 2 தீமோ. 3:15).

### 8. திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள் (சங்கீதம் 78:72)

ஆண்டவர் அனுமதிக்கும்வரை தொடர்ந்து நன்றாக படியுங்கள். எந்த படிப்பானாலும் அது ஊழியத்திற்கு உதவும். ஆண்டவர் ஒவ்வொருவரையும் ஒரு திறமையோடு தான் படைத்திருக்கிறார். உங்களுக்கு ஆண்டவர் கொடுத்திருக்கிற திறமைகளில் சிறப்புத் தேர்ச்சி அடைய பிரயாசப்படுங்கள், சம்பந்தப்பட்ட புத்தகங்களை வாசியுங்கள், அதற்குமேல் பயிற்சி எடுங்கள். மட்டுமல்லாது ஊழியத்திற்கு தேவையான கீழ்க்கண்ட சில அடிப்படையான திறமைகளை ஓரளவாவது வளர்த்துக்கொள்ளுங்கள். மோசே (அப். 7:22).

இசை, பிறமொழிகள் (ஆங்கிலம், இந்தி), வாகனங்கள் ஓட்டுதல், நீச்சல், சமையல், முதலுதவி, பாட்டு, ஆராதனை நடத்துதல், பிரசங்கம் பண்ணுதல், கணினி உபயோகித்தல், ஜெபம் நடத்துதல், சுவிசேஷம் சொல்லுதல், சாட்சி சொல்லுதல், நிர்வாகத்திறன், மொழிபெயர்ப்பு.

### 9. வேதாகமக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெறுங்கள்

நமது ஸ்தாபனத்திலுள்ள வேதாகமக் கல்லூரிகளை கீழே தருகிறேன். இதில் எது உங்களுக்கு வசதிப்படுமோ, அதில் சேர்ந்து பயிற்சி பெறுங்கள்.

1. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி, மதுரை (TBC)
2. மெட்ராஸ் வேதாகமக் கல்லூரி, சென்னை (MABC)
3. திரித்துவ வேதாகமக் கல்லூரி, கே.பி. வலசை, செங்கோட்டை (பெண்களுக்கு மட்டும்)
4. ஆண்டியாக் வேதாகமக் கல்லூரி, பாண்டிச்சேரி
5. சென்ட்ரல் வேதாகமக் கல்லூரி, டெல்லி.
6. சதர்ன் ஏசியா வேதாகமக் கல்லூரி, பெங்களூர்

### 10. தரிசனத்துக்கேற்ற வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுங்கள்

உங்களுக்கு வரப்போகும் வாழ்க்கைத் துணை இரட்சிக்கப்பட்டவராக, ஊழியத்திற்கு அர்ப்பணித்தவராக இருந்தால் மட்டும் போதாது, உங்கள் தரிசனத்திற்கு ஒத்த தரிசனம் உடையவரா என்ற கேள்வியைக் கேட்டுப் பார்ப்பது நல்லது. இல்லாவிட்டால் உங்கள் தரிசனத்தை நிறைவேற்றுவது கடினமாகிவிடும்.



# இரட்சிக்கும்படிக்கு நான் ஆதரவாயிருப்பேன்


## பாஸ்டர் M. ஜேசுராஜ்

உதவி இயக்குனர், வடகிழக்கு மிஷனரி ஊழியங்கள்


கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

அசீரிய ராஜாவாகிய சனகெரிப், துணிச்சலோடு தன்னை சேவிக்காமல் தள்ளிவிட்ட ராஜாவாகிய எசேக்கியாவுக்கும் தேவ ஜனங்களுக்கும் விரோதமாக திரளான சேனையோடு வந்து, முற்றுகை போட்டு, ஸ்தானாபதிகளை அனுப்பி, தூஷணமாய்ப் பேசி நிருபத்தையும் கொடுத்தனுப்பியதை நாம் 2 இராஜா. 18-ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். செய்தியை கேட்ட எசேக்கியா ராஜா வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டு உடுத்திக்கொண்டு, ஆலயத்தில் பிரவேசித்து, அந்நிருபத்தை தேவ சமுகத்தில் விரித்து, தேவனுடைய உதவிக்காக கூப்பிடுகிறார்; தீர்க்கதரிசி ஏசாயாவிடம் ஸ்தானாபதிகளை அனுப்பி விண்ணப்பம் பண்ணச் சொல்கிறார்.

ஜெபத்தைக் கேட்கிறவரும், தமது ஜனத்துக்காக வைராக்கியங் கொள்ளுகிறவருமாகிய நமது தேவன், தமது தீர்க்கதரிசி ஏசாயா மூலம் பின்வரும் வார்த்தைகளைச் சொல்லி அனுப்புகிறார்: ‘என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு இதற்கு ஆதரவாக இருப்பேன்...‘ (2 இராஜா.19:34).

அன்புக்குரியவர்களே! இன்று நமது தேசம் அரசியல் சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகளுக்கு மேலாகியும் ஆன்மீக சுதந்திரம் இல்லாத நிலையில், மக்கள் பாவத்திலும், சாபத்திலும், அடிமைத்தனத்திலும் முறையிட்டுத் தவித்துக் கொண்டிருக்கின்றனர். சத்துருவாகிய பிசாசோ சனகெரிப் போல, உங்களை என் கையினின்று தப்புவிப்பவன் யார்? (2இராஜா.18:35) என்று கொக்கரிக்கிறான்; நீங்கள் சாகாமல் பிழைக்க வேண்டுமானால் வந்து என்னோடே ராசியாகுங்கள் (அல்லது) சரணடையுங்கள் என்று சொல்லி ஜனங்களை தன்பக்கம் இழுக்க முயற்சிக்கிறான் (2 இராஜா. 18:31).

இன்று மெல்ல மெல்ல சுவிசேஷ வாசல் அடைபட்டு வருவதுபோல் மாய தோற்றத்தை உருவாக்கியும், நம்மை சூழ அந்தகாரத்தின் ஆதிக்கம் அதிகரித்து எதிர்காலம் பற்றிய நம்பிக்கை மங்கி இருப்பதுபோலும் காண்பித்து, இங்கும் அங்குமாக சில வெற்றிகளை பிசாசு சுதந்தரித்துக் கொண்டது போல் இருந்தாலும், சர்வவல்ல தேவன் இந்தக் காலத்தில் வாழும் தமது பிள்ளைகளாகிய நமக்கு தீர்க்கமான ஒரு வாக்கை உரைக்கிறார்; அது தான் என்ன? ‘நான் இந்த நகரத்தை (தேசத்தை) இரட்சிக்கும்படிக்கு இதற்கு ஆதரவாயிருப்பேன்.‘ இதைச் சொன்னவர் ஒரு மனிதனல்ல; சர்வ வல்லவர். எனவே, நமது தேசம் இரட்சிக்கப்படுவது நிச்சயம்; மாநிலங்கள் கர்த்தரை அறிவது சத்தியம். தேவன் நிர்ணயித்ததை எந்த அந்தகாரமும் இருளும் தடுக்க முடியாது; எந்த அதிகாரங்களும் வல்லமைகளும் மேற்கொள்ள முடியாது. தேசம் எழுப்புதலை நிச்சயம் காணும். எப்படி ஆகும்? - தெரியாது; ஆனால் எப்படியும் ஆகும். சத்துரு வெட்கப்பட்டுப் போவான்; தேவன் மகிமைப்படுவார்.

தேவன் நமது தேசத்தை இரட்சிக்க இரண்டு முக்கிய காரணங்களைக் கூறுகிறார்: முதலாவது, என் நிமித்தமும் என்று தன்னை முன் நிறுத்தி கூறுகிறார். அதன் அர்த்தம்: முதலாவது, தேவன் நமது தேசத்தின் இரட்சிப்பைக் குறித்து வைராக்கியங் கொண்டுள்ளார். அவர் இருதயம் அழியும் மனுக்குலத்திற்காக துடிக்கிறது. திரித்துவ தேவனே மிஷனரி தேவன் ஆவார்.

பிதாவாகிய தேவன் –முதல் மனிதன் பாவம் செய்து தம்மை விட்டுப் பிரிந்தது முதல் ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்? என்ற தேவனுடைய இருதயத்தின் தேடல் இன்றும் அழிந்து கொண்டு இருக்கிற ஒவ்வொரு தனி மனிதனையும், குடும்பத்தையும், தேசத்தையும் பின்தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதற்காகவே தம்முடைய ஒரே பேரான குமாரன் என்றும் பாராமல் …அவரைத் தந்தருளி இவ்வுலகத்தில் அன்புகூர்ந்தார். ஆப்பிரிக்க மிஷனரி டேவிட் லிவிங்ஸ்டன் சொன்னது: தேவனுக்கு ஒரே ஒரு குமாரன் தான் இருந்தார்; அவரும் மிஷனரியாகவே அனுப்பப்பட்டார்.

கர்த்தராகிய இயேசுவும், எந்த ஒரு மிஷனரியும் பிரயாணப்பட்டிராத தொலைவு (பரலோகத்திலிருந்து பூலோகம் வரை) பயணித்த மிஷனரி தேவன். காணாமற்போன ஒரேயொரு ஆடும், ஒரு வெள்ளிக்காசும் ஒரு குமாரனும் கூட அவருக்கு முக்கியம். கிறிஸ்துவின் ஆவி – மிஷனரி ஆவியே; எவ்வளவாய் நாம் அவரை நெருங்குகிறோமோ, அவ்வளவாய் நாம் தீவிர மிஷனரியாக மாற்றமடைகிறோம் –ஹென்றி மார்ட்டின்

பரிசுத்த ஆவியானவராகிய தேவனும், கொடுக்கப்பட்டதே பாவமனிதனின் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்தி, நரகத்துக்கு தப்புவித்து, சபைக்குட்படுத்தி, பரலோகம் சேர்க்கவே.

எனவே திரித்துவ தேவனின் இருதயம் – ஒருவரும் கெட்டுப்போகாமல், எல்லாரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் வேண்டும் என்பதே!

நம் தேசம் இரட்சிக்கப்பட எல்லாரையும் விட முதன்முதல் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். எனவேதான், என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்திரமாகவும் பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன் (சங்.2:8) என்று வாக்கு உரைத்திருக்கிறார். அப்படியானால், நமது மிஷன் பணித்தளங்களில் எழுப்புதலை அனுப்புவது தேவனுடைய பூரண சித்தம். நமது திருச்சபைகளில் அனுதினம் ஆத்துமாக்கள் சேர்க்கப்படுவது தேவனுடைய பூரணசித்தம்.

இரண்டாவது, என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் என்று சொல்லுகிறார். தன் தேசத்தின் நலனுக்காக ஜெபித்த, கொடுத்த, யுத்தம் செய்த, தியாகம் செய்த தமது தாசனாகிய தாவீதின் வாஞ்சைகளையும் பிரயாசங்களையும் நிறுத்திப் பார்க்கிறார். இங்குதான் தேவன் தேசத்துக்காக கதறுகிற, கண்ணீர் விடுகிற, தியாகம் செய்த, செய்து கொண்டிருக்கிற ஒவ்வொரு பரிசுத்தவான்களையும் விசுவாசிகளையும் கணக்கில் எடுக்கிறார். மிஷன் ஊழியங்களுக்காக நீங்கள் ஏறெடுக்கும் உங்கள் ஜெபங்கள், உதாரத்துவமான காணிக்கைகள்,

அலைச்சல்கள், தியாகங்களை அவர் கருத்திற்கொள்கிறார். நமது கிரியையையும்... தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுவதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே (எபி.6:10). கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராது... (1கொரி. 15:58).

எனவே பிரியமானவர்களே! தேவ இராஜ்ஜியத்துக்கடுத்த எல்லாவற்றிலும் நாம் தொடர்ந்து உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், ... எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்போமாக! (1கொரி. 15:58).

மட்டுமல்ல, மேற்கண்ட வசனத்தில் ஆத்துமாக்களை இரட்சிக்கும்படிக்கு நான் ஆதரவாயிருப்பேன் என்றும் உரைத்திருக்கிறார். நம் சுகவாழ்விற்கும் ஊழியத்திற்கும் யார் யார் ஆதரவாக இருக்கிறார்களோ இல்லையோ? ஒன்று நிச்சயம். நம்மை அழைத்த தேவன் ஆதரவாயிருக்கிறார். இந்த வல்ல தேவனின் ஆதரவு நிச்சயம் நம்மைப் பாதுகாக்கும்; பயன்படுத்தும்; எதிர்ப்புகளைத் தகர்க்கும்; சூழ்நிலைகளை மாற்றும்; தேவைகளை சந்திக்கும்; ஆசீர்வதித்து கனப்படுத்தும்.

எனவே, மிஷன் ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபிப்போம்! அதிகம் கொடுப்போம்! தீவிரித்து செயல்படுவோம்! பெருத்த மாற்றங்களைக் காண்போம்! தேசத்தை சுதந்தரிப்போம்! ...பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது (சங். 98:3).

## ஜெபக்குறிப்புகள்

**கீழ்க்கண்ட ஜெபக்குறிப்புகளுக்காக தயவுசெய்து ஜெபிக்கவும்**

1. நமது பிரதேசத்தின் வடகிழக்கு மிஷன் இலாக்காவிற்குட்பட்ட கீழ்க்கண்ட மாநிலங்களில் எழுப்புதல் உண்டாக, ஜனங்கள் கர்த்தருடைய அன்பை அறிய.

   1.அருணாச்சல பிரதேசம்; 2.அஸ்ஸாம்; 3.சிக்கீம்; 4.மிசோரம்; 5.மணிப்பூர்; 6.மேகாலயா 7.திரிபுரா; 8.நாகலாந்து; 9.மேற்கு வங்காளம்; 10.சட்டீஸ்கர்; 11.ஒடிசா; 12.பீஹார்; 13.ஜார்கண்ட்; 14. ஆந்திர பிரதேசம்; 15.தெலுங்கானா.

2. எழுப்புதலின் பத்தாண்டு திட்டத்தின்படியான மொத்தம் 600 மிஷனரிகளில் இவ்வருடத்தில் மட்டும் 60 மிஷனரிகளை தேவன் எழுப்ப, இம்மிஷனரிகளை தாங்குகிறவர்களைக் கர்த்தர் தர
3. வட மாநிலங்களில் பணி செய்யும் 400க்கும் அதிகமான மிஷனரிகளின் குடும்பங்களுக்காக ஊழியங்களுக்காக.
4. வடமாநில மிஷன் ஊழியங்களுக்காக மாதந்தோறும் தேவைப்படும் 30 லட்சத்திற்கும் அதிகமான பணத்தேவைகளைக் கர்த்தர் சந்திக்க.
5. நமது சபைகளிலுள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் மிஷனரி ஊழிய சிந்தை பெருக, மிஷன் ஊழியங்களுக்காக அவர்கள் ஜெபிக்க, தாங்க, ஊழியம் செய்ய.
6. தேவையுள்ள வடமாநில மிஷன் பணித்தளங்களில் இடங்கள் வாங்கப்பட ஆலயங்கள் கட்டப்பட.
7. வடகிழக்கு மிஷன் இலாக்காவின் அனைத்து மத்திய, பிராந்திய, மண்டல பொறுப்பாளர்களின் சுகத்திற்காக, பெலனுக்காக மற்றும் ஊக்கமான மிஷன் பணிகளுக்காக

ஊழிய அழைப்பு பெற்ற
பெண்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)

திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |

2021 – 2022-ம் கல்வியாண்டிற்கான மாணவியர் சேர்க்கை நடைபெற்று கொண்டிருக்கிறது.
விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டிய இணையதள முகவரி
www.trinitybiblecollege.in

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர வேண்டிய

**கடைசி நாள் : மே 30, 2021**

தொடர்பு : The Registrar
**Trinity Bible College**
Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 99942 47117, 75985 43752



# காலத்தை அறியும் அறிவு

## Rev.M. இயேசுதாஸ் கென்னடி

தலைமை போதகர், புதுச்சேரி மண்டலம்

கிறிஸ்து இயேசுவில் மிகவும் பிரியமானவர்களே!

பொல்லாத நாட்களிலே வாழ்ந்துகொண்டு வருகிறோம் என்பதை நன்கு அறியுங்கள். இந்த நாட்கள் குறித்து பலர் இன்னும் அறியாமல், உணர்வில்லாமல் வாழ்வதை நாம் காணமுடிகிறது.

மோசே சங்கீத புத்தகத்தில் நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும் (சங்.90:12) என்று ஜெபிக்கின்றார்.

ஆம்! நாம் இந்த நாட்களை குறித்த அறிவை அடையவேண்டும். இயேசுகிறிஸ்து கடைசிகாலத்தில் உள்ள ஜனங்களை குறித்து மத்.24:37ல் சொல்லும்போது நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும் என்றும் அடுத்த வசனத்தில் வெள்ளம் வந்து வாரிக்கொண்டுபோகும் மட்டும் உணராதிருந்தார்கள் என்றும் வாசிக்கின்றோம். இது கடைசி காலத்து அடையாளங்களில் ஒன்று. ஆனால் தேவ ஜனம் இப்படி இருக்கக்கூடாதே! ஆகாயத்திலுள்ள நாரை முதலாய் தன்வேளையை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள் என்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல் (எரே.8:7). இயேசுவும் லூக்கா 12:56-ல் பூமியின் தோற்றத்தையும் வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க உங்களுக்கு தெரியுமே, இந்த காலத்தையோ நிதானியாமற்போகிறதென்ன? என்று கேட்கிறார்.

பிரியமானவர்களே! இந்த கடைசி காலத்தில் காலத்தை அறியாததினால் நாம் இழக்கும் நன்மைகளை வேதத்தின் அடிப்படையில் உங்களோடு சொல்ல விரும்புகிறேன்.

### ஜெபத்தோடு படியுங்கள்

### 1. காலத்தை அறியாததினால் இழந்த மீட்பு

உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்திற்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது, உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச்சூழ மதில்போட்டு, உன்னை வளைந்து கொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி (லூக்கா 19:42,43).

இயேசுவின் மூன்றரை கால ஊழியத்தில் இரட்சிப்பை தவறவிட்ட கூட்டத்தை நாம் என்னவென்று சொல்வது? இரட்சகராக வந்தவர், இரட்சித்தவர், விடுவித்தவர், சுகம் தந்தவர், இறுதியில் கண்ணீர்விட்டு அழுகின்றார். காரணம் இயேசுவின் ஊழியம் பூமியில் நிறைவேறப்போகிறது. சில நாட்களில் அவர் பாடுபட்டு மரிக்கப் போகின்றார். ஆனால் அந்த ஜனங்கள் இன்னும் உணர்வடையாமல் அவரை உலகப்பிரகாரமான இராஜாவாக நினைத்து இரட்சியும் என்று சத்தமிட்டார்கள். அதனால் ஆன்மீக மீட்பை அவர்கள் பெற்றுக்கொள்ள தவறிவிட்டார்கள். எத்தனை பரிதாபம்!

இயேசு கிறிஸ்து லூக்கா 12-ம் அதிகாரத்தில் சொன்ன உவமையில் ஒரு மனிதன் தன் ஆத்துமாவைப் பார்த்து, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது, நீ இளைப்பாறி, புசித்து குடித்து, பூரிப்பாயிரு என்று சொன்னவனை பார்த்து, மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார் (வசனம் 19,20). அந்த மனிதனுக்கு சேர்த்துவைக்க வேண்டும் என்கிற அறிவு இருந்தது. ஆனால் தன் ஆத்துமாவைக் குறித்தோ, நித்திய வாழ்வைக் குறித்தோ எந்த அறிவும் இல்லை.

அன்பரே! நீங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டீர்களா? அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும்? தம்முடைய சித்தத்தின்படி, பகிர்ந்துக்கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்துமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்று இருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் என்று எபி.2:4-ல் வாசிக்கின்றோம். கொலோ 4:5-ல் ஞானமாய் நடந்து காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள் என்று எத்தனை எச்சரிக்கையாக சொல்லுகிறார்.

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து காணிக்கை கொடுத்து, சபையில் அங்கத்தினராக இருப்பதினாலோ, சில சிறிய ஊழியத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதினாலோ நாம் இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்று அர்த்தம் கொள்ள முடியாது. இரட்சிப்பு என்பது, நாம் வாயினால் அறிக்கையிட்டு பாவத்திலிருந்து மீட்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டு, பின்பு ஞானஸ்நானம் பெற்று, அவருக்கு சாட்சியாக வாழ்வதாகும்.

இது ஒரே நாளில் முடிந்து விடும் ஒரு சம்பவம் என்று எண்ணி நம்முடைய இறுதி நாள்வரை நாம் அந்த இரட்சிப்பைக் காத்துக்கொள்ள வேண்டும். இந்த அனுபவம் இதை வாசிக்கின்ற உங்களுக்கு இல்லை என்றால் வேதம் சொல்லுகிறது,

அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள். (2 கொரி.6:2) ஆம்! இன்றே இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருக்காக வாழ தீர்மானியுங்கள்.

இந்த காலத்தை அறியாமல் விட்டால் நாம் இரட்சிப்பை இழந்துவிடுவோம். மரணத்திற்கு பின்பு இரட்சிக்கப்பட முடியாது. இது நாம் உயிரோடு இருக்கும்போதே அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டிய அனுபவம்.

## 2. காலத்தை அறியாததினால் இழந்த வளர்ச்சி

காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பாரமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள் (எபிரெயர் 5:12).

கிறிஸ்தவ வாழ்வில் வளர்ச்சி மிக முக்கியம். தேவன் நம்மை இரட்சித்ததும் நாம் பல நேரங்களில் திருப்தி கண்டுவிடுகிறோம். அதுவே கிறிஸ்தவ வாழ்வின் பூரணம் என்றும் நினைத்து விடுகின்றோம். ஆனால் அதுதான் நம் வாழ்வின் துவக்கம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எகிப்திலிருந்து விடுவிக்கப்பட இஸ்ரவேலர்கள் கானானை காண தவறியதற்கு காரணம் சரீர பிரகாரமாக மீட்கப்பட்டவர்கள் மனதளவில் எகிப்தை விட்டு வெளியேற தவறிவிட்டார்கள்.

எடுத்ததற்கெல்லாம் தேவனை முறுமுறுத்து, கேள்வி கேட்டு, பரீட்சைப்பார்த்து குழந்தைத்தனமாகவே வாழ்ந்து வந்தார்கள்.

இன்றும் பல கிறிஸ்தவர்களின் நிலை இதுதான். இரட்சிக்கப்பட்ட நாளில் இருந்த அதே வளர்ச்சி பல ஆண்டுகளாக அப்படியே இருப்பது எத்தனை பரிதாபமான நிலையை காட்டுகிறது, இரட்சிக்கப்பட்ட நாளில் இருந்த நிலை நாளுக்கு நாள் வளர வேண்டுமே! இல்லை என்றால் நாம் குழந்தை கிறிஸ்தவர்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. கிறிஸ்தவ வாழ்வில் நாம் குழந்தைகளாய் இருந்த காலத்தை நாம் அவரை விசுவாசித்ததினால் யோவான் 1:12-ன் படி தேவ பிள்ளைகள் என்று அறிந்து கொள்ளலாம். அடுத்த வளர்ச்சி நாம் ஆவியானவரால் நடத்தப்படும்போது ரோமர் 8:14-ன் படி தேவபுத்திரர் என்ற நிலையை அடைகிறோம். அடுத்து நாம் தேவ மனிதன் அதாவது புருஷன் என்ற நிலையை 1 கொரி.13:11-ல் வாசிக்கின்றோம். நாம் இந்த நிலையை அடைய தேவன் எவ்வளவு காலத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் நாம் இன்னும் குழந்தைகளாய் இருந்தால் எப்படி? கலா.3:4-ல் அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாய் இருந்தோம் என்று வாசிக்கின்றோம்.

பவுல் கொரிந்து சபையைப்பார்த்து, மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று (1 கொரி.3:1) என்று அவர்களின் வளர்ச்சியற்ற நிலையைக்கண்டு ஏமாற்றத்ததோடு சொல்லுகின்றார். காலத்தைப் பிரயோஜனப்படுத்தாமல் இருந்தால் இப்படி நடக்க வாய்ப்பு உண்டு.

எபி.5:12-ல் காலத்தைப்பார்த்தால் என்று ஆக்கியோன் சொல்லுகின்றார். ஆம் காலத்தை வீணடித்த கூட்டம் இன்னும் வளர்ச்சி இல்லாமல் குழந்தைகளாய் இருந்தால் நம் பரம தகப்பனுக்கு எத்தனை வேதனையாக இருக்கும்? அன்பரே! பலர் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சி இல்லாமல் போகக்காரணம்: பேர் அளவில் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து, அதில் திருப்தி கண்டு, காலம் முழுவதும் குழந்தைகளாகவே இருந்து நாட்களை வீணடித்து வருகின்றனர். லூக்கா 8:14-ல் "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக் கிறார்கள்; கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன்கொடா திருக்கிறார்கள்" என்று வாசிக்கின்றோம். வசனத்தைக்கேட்டும் உலக காரியங்களில் நாம் காண்பிக்கிற கவனங்கள் நம்மை வளரவிடாமல் தடுத்துவிடுகின்றதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

காலத்தை அறிந்துகொள்வோம். அன்பு சகோதரா! ஆவிக்குரிய வளாச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்போம். நாளுக்கு நாள் உங்களின் ஆவிக்குரிய வளர்ச்சியைக்குறித்து சிந்தியுங்கள். பிரயாசப்படுங்கள் எத்தனைக்காலத்தை நாம் இழந்துவிட்டோம் என்று உணர்வடைந்து, உடனே சுதாரித்துக்கொண்டு காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொண்டு வளர முயற்சி எடுப்போம்.

### 3. காலத்தை அறியாததினால் இழந்த வாய்ப்பு

அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற்போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார்; உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று (மத்.21:19).

இந்த சம்பவம் நம் எல்லாரையுமே அதிகம் சிந்திக்க வைக்கும் சம்பவம் அல்லவா? ஒரு அத்திமரம், தனியே நின்ற அத்திமரம், இலைகளால் தன்னை மறைத்து நின்ற அத்திமரம் காலங்காலமாக கொடுத்த வாய்ப்பைக் குறித்த கவனம் இல்லாத அத்திமரம் இறுதியில் பட்டுப்போனது. இது நமக்கு கற்றுக்கொடுக்கும் எச்சரிப்பின் பாடம். ஆகவே, நாம் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள அழைக்கப்பட்டிருக் கின்றோம்.

அத்திமரம் போல பல சாக்குப்போக்குகளை சொல்லிக்கொண்டு நமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை நாம் இழந்து கொண்டு இருப்பது நமக்கும் ஆபத்துதான். நாம் கனி கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாட்டப்பட்டோம். ஆனால் கசப்பான கனிகளை கொடுத்து அவரை ஏமாற்றினது எந்த விதத்தில் நியாயம். பிரியமானவர்களே! நாம் கனி கொடுக்கின்றோமா? காலத்தை அறிந்து கொண்டு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டவர்களாக நம்மால் முடிந்த அளவு கனியுள்ள வாழ்க்கை வாழ்வோம்.

கிறிஸ்தவ வாழ்வில் நாம் ஆத்தும ஆதாயம் செய்வது நம் கடமை. ஆனால் ஆத்தும ஆதாயம் என்றதும் இது ஊழியர்களின் வேலை என்று சொல்லி அதை நழுவவிட்டு விடுகின்றோம். சீரிய தேசத்திற்கு சிறையாக கொண்டுபோகப்பட்ட சிறுமியின் சிறப்பான ஊழியம் நாகமானை விசுவாசி ஆக்கிற்றே! அந்த காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு கனி கொடுத்தாளே! காலத்தை அறிந்த நான்கு சுத்தமற்ற குஷ்டரோகிகளின் சுத்த செய்தி பஞ்சகாலத்தை சமாளிக்க வைத்ததே! நாம் எப்படி? கனியுள்ள வாழ்க்கை வாழ்கின்றோமா? நம்மால் எத்தனை பேர் இயேசுவை அறிந்துள்ளனர்? நம் கனியில் இயேசு மகிமைப்படுவாரா? மகிழ்ச்சியடைவாரா? மனநிறைவு காண்பாரா? சிந்திப்போம்.

அப்.13:36-ல் தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய்தபின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு, அழிவைக் கண்டான். எத்தனை அற்புதமான வார்த்தை இது! தன் காலத்தில் தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்த தாவீதைப் போல, நம் காலத்தில் அவர் சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்து, கனியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்ற உணர்வு நமக்குள் ஏற்படட்டும்.

தன் காலத்தில் தன் கனியைத்தந்து இலையுதிராத மரமாக நாம் மாறவேண்டுமே! ஒரு வருஷம், ஒரு வருஷம் என்று எத்தனையே வாய்ப்புகளை பெற்றுவிட்டோம். ஆனால், நாம் இன்னும் கனி கொடுக்கவில்லை. லூக்கா 13:6,7-ல் தோட்டக்காரர் மரத்தின் மேல் உள்ள நம்பிக்கையில் அதற்காக எஜமானிடம் பேசினார். எத்தனை காலம் நம்மை நம்பி நமக்காகப் பிதாவினிடம் பரிந்து பேசிக்கொண்டு இருப்பார்?.

பிரியமானவர்களே! இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று வாசிக்கின்றோம். தயவு செய்து நமக்குக் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு காலத்தை அறிந்தவர்களாக ஆத்தும ஆதாயம் செய்து, அதை பிரயோஜனப் படுத்திக்கொள்வோம். வாய்ப்பை இழந்துவிடடுப் பின்பு கண்ணீர் வடித்து எந்த பிரயோஜனமும் இல்லை. எனவே இன்றே காலத்தை அறிந்தவர்களாய் நடந்துகொண்டு கனியுள்ள வாழ்வு வாழ தீர்மானிப்போம்

எனக்கு அன்பானவர்களே! காலத்தைப் பிரயோஜனப்படுத்துவோம். இல்லையென்றால் மீட்பை இழப்போம், வாய்ப்பை இழப்போம். இது பொல்லாத காலம். நமக்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் சரியாக பயன்படுத்தி அவருக்குப் பிரியமாக வாழ்வோம். கர்த்தர் தாமே இந்த நாட்களில் நமக்கு நாட்களை என்னும் அறிவைத் தந்து நம்மை நடத்துவாராக. ஆமென்.

சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ




## பாஸ்டர். பெவிஸ்டன்

பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படி இருக்கிறீங்க.. நீண்ட லாக்டவுன்க்கு பின்பு கொஞ்சம் கொஞ்சமாய் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகிறது. வித்தியாசமான சூழல், புதுமையான அனுபவம், நீண்ட நாட்களுக்கு பின் சக நண்பர்களை பார்க்கிற வாய்ப்பு நல்லா என்ஜாய் பண்ணுங்க. அதே நேரம் ரொம்ப கவனமாகவும் இருக்கணும். இன்னும் கொரோனா வைரஸ் பரவிக்கொண்டு தான் இருக்கிறது. மாஸ்க் கட்டாயம் போடுங்க, அடிக்கடி கை, கால், முகம் கழுவுங்க, யாரையும் தொட்டு பேச விரும்பாதிருங்க.. ஒக்கே வா.. உங்களுக்காக நாங்கள் ஒவ்வொரு நாளும் ஜெபிக்கிறோம். நீங்களும் உங்களை போன்ற சிறுவர்களுக்காக ஜெபிக்க மறவாதிருங்க.. சரி... சரி... ரொம்ப பேசி உங்க நேரத்தை வீணாக்காம நேரடியா கதைக்குள்ள வருகிறேன். எல்லாரும் கதை கேட்க ரெடியா?

இங்கிலாந்தில் ஒரு கடவுள் பக்தி உள்ள ஒரு பணக்கார முதலாளிக்கு பிறந்த நாள் வந்தது. அந்த முதலாளி தனது வீட்டில் வேலை செய்யும் அனைவருக்கும் தனது பிறந்தநாள் அன்று ஏதாவது பரிசு கொடுக்க வேண்டும் என நினைத்தார். பின்னர் அதின்படியே பிறந்தநாள் அன்று காலையிலேயே ஒரு மேஜையில் பரிசு பொருட்களை அடுக்கி வைத்து தனது வேலைக்காரர்கள் வருகையை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தார்.

வேலைக்காரர்கள் பிறந்த நாள் வாழ்த்து பாடலை பாடிக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்து தங்கள் முதலாளிக்கு வாழ்த்து தெரிவித்தனர். பின்னர் முதலாளி அவர்களை ஏற்றுக்கொண்டு, மேஜையை காட்டி இதிலே பல பரிசு பொருட்களை வைத்திருக்கிறேன். விருப்பமானதை எடுத்துக்கொள்ளுங்கள் என கூறிவிட்டு தன் இருக்கையில் அமர்ந்தார்.

குதிரைக்காரர் வந்து எனக்கு பணம் தான் தேவை என்று பண முடிச்சை எடுத்தார். தோட்டக்காரர் எனக்கு வாசிக்க தெரியாது நானும் பண முடிச்சையே எடுத்துக்கொள்கிறேன் என்றார். பின்னர் காவல்காரர் வந்து எனக்கு பார்வை குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஆப்ரேஷன் செய்ய பணமில்லாமல் இருக்கிறேன். ஆகவே நானும் பண முடிச்சையே எடுத்துக்கொள்கிறேன் என கூறி எடுத்தான். அவரை தொடர்ந்து சமையற்காரி வந்து என் பிள்ளைக்கு திருமணம் செய்து வைக்க பணமில்லாமல் இருந்தேன். கோடி நன்றி ஐயா என கூறிக்கொண்டே ஒரு பண முடிச்சை எடுத்தாள். இப்படியாக ஒவ்வெருவரும் பண முடிச்சுகளையும் பல்வேறு உயர்தரமான பொருட்களையும் வரிசையாக வந்து எடுத்தார்கள்.

கடைசியாக பத்திரிக்கை போடும் சிறுவன் வந்தான். மேஜையை சுற்றிலும் பார்க்கிறான். ஏராளமான பண முடிச்சுகளும் விலையுயர்ந்த பொருட்களும் இருப்பதை பார்த்து திகைத்தான். மேஜையின் ஓரத்தில் ஒரு பைபிள் இருப்பதையும் கண்டான். இந்த ஏழை சிறுவன் பல நாட்களாக தனக்கு ஒரு பைபிள் வேண்டுமென்று ஜெபித்துக்கொண்டிருப்பதால் அவனது கண்கள் பைபிளையே

உற்றுப்பார்த்தது. முதலாளி அவனை பார்த்து உனக்கு பைபிள் வேண்டுமா? அல்லது 100 பவுன் பண முடிச்சு வேண்டுமா? எது வேண்டுமானாலும் எடு என்றார். உடனே சிறுவன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான் எனக்கு பணம் வேண்டாம். மேஜையின் ஓரத்தில் இருந்த அந்த பைபிள் போதும் என்று கூறி சந்தோஷமாய் எடுத்தான்.

அனைவரும் அவனை பிழைக்க தெரியாதவன் என கூறி ஏளனம் செய்தனர். அவனோ ஆயிரம் ஆயிரம் பொன் வெள்ளியை பார்க்கிலும் வேதமே சிறந்தது (சங்கீதம் 19:10) என்று கூறிக்கொண்டே வேதாகமத்தை திறந்தான். சிறிது நேரத்தில் ஏளனம் செய்தவர்களெல்லாரும் அதிர்ச்சி அடைந்தார்கள். ஆம் வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் விலையேறப்பெற்ற பவுன் நோட்டுகள் இருந்தன. நல்ல பங்கை தெரிந்தெடுத்த சிறுவனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒரே கொண்டாட்டம் தான்.


அன்பு தம்பி தங்கச்சி உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எதை எடுத்துக்கொள்ள போகிறீர்கள். இம்மைக்குரியவைகளா? அல்லது நித்தியத்துக் குரியவைகளா? தேவனுக்கு பிரியமானதை தெரிந்து கொண்டால் நம் சூழ்நிலைகளை அவர் பார்த்துக்கொள்வார். சிறு வயதிலிருந்தே ஜெபம், வேத தியானம், ஆலய ஆராதனை இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பாருங்களேன். உங்கள் தேவைகளை, குடும்பத்தின் சூழ்நிலைகளை அவர் பார்த்துக்கொள்ளுவார். ஆகவே உங்கள் தெரிந்தெடுப்பு மிக முக்கியமானது.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் (மத். 6:33).

இந்த மாத சிறுவர் பகுதி நிச்சயம் உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் கருத்துக்களை தீர்மானங்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்க மறவாதிருங்கள். அடுத்த இதழில் வேறொரு சுவாரசியமான கதையோடு உங்களை மறுபடியும் சந்திக்கிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

## சிலுவைப் பாதை



காட்டிக் கொடுக்கும் யூதாசும்
கை கழுவும் பிலாத்தும்
குற்றப்படுத்தும் சமயதலைவர்களும்
குறை சொல்லும் மக்களும்
மறுதலிக்கும் பேதுருவும்
மறுத்து ஓடும் சீஷர்களும்
அவமானமும், அங்கவஸ்திரம் கிழிதலும்
கட்டுவதும் குட்டுவதும்
கடிதலும் காறி உமிழ்வதும்
இயேசுவின் சிலுவைப் பாதையில் மட்டுமல்ல
ஊழியனின் ஊழியப் பாதையிலும் தான்
உண்மை விசுவாசியின் பாதையிலும் தான்

கதறி அழுத மக்களும்
கடைசிவரை வந்த யோவானும்
சிலுவை சுமந்த சீமோனும்
சிரம் தாழ்த்தி ஏற்ற சிப்பாயும்
சிலுவைப் பாதையில் இயேசுவுக்கு மட்டும்தான்
இந்த பாதையில் நமக்கோ இயேசுமட்டும் தான்
சிலுவைப் பாதையின் முடிவு மரணம்
மரணத்தின் முடிவு உயிர்த்தெழுதல்
உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மோடு - எனவே
உயிர்ப்போடு செயல்படுவோம்
உலக மக்களின் வாழ்வை
உயிர்மீட்சி அடையச்செய்வோம்.

சகோதரி . **ரூத் ஐசக்,** பேரையூர் ஏ.ஜி. சபை.

---



# ஆன்லைன் விளையாட்டுகளும், ஆபத்துக்களும்

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த நாளிலும் பரிபூரண ஜீவன் பத்திரிக்கையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சமீப நாட்களில் வரும் செய்திகள் பல ஆன்லைன் விளையாட்டுக்களினால் ஏற்படும் விபரீதங்களைக் குறித்தே உள்ளன. இந்த சுழ்நிலையில் பெற்றோர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை நாம் பார்ப்போம்.

சில வாரங்களுக்கு முன்பாக புதுச்சேரியை சேர்ந்த 16 வயது சிறுவன் தொடர்ந்து 4 மணி நேரம் தொடர்ச்சியாக ஆன்லைனில் கேம் விளையாடியதினால் மயங்கி விழுந்து உயிரைவிட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கடந்த வருடம் இதே போல ஈரோட்டை சேர்ந்த சிறுவன் உயிரிழந்துள்ளான். கையில் செல்போனுடன் உலகத்தையே மறந்து வீடியோகேமில் ஆர்வம் காட்டிவரும் பல சிறுவர்கள் உயிரைமாய்ப்பது இப்போது தொடர்கதையாகி வருகிறது. அதுவும் லாக்டவுன் நாட்களுக்கு பிறகு மிகவும் அதிகரித்துள்ளதாக ஆய்வறிக்கை கூறுகிறது. 2020 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஆன்லைன் விளையாட்டு விளையாடுவோரின் எண்ணிக்கை 56 சதவீதம் அதிகரித்துள்ளதாக ஆய்வு கூறுகிறது. அதிலும் குறிப்பாக 18 வயதுக்குட்பட்டோரை கவரும் விதத்திலேதான் ஆன்லைன் விளையாட்டுகள் வடிவமைக்கப்படுகின்றன. பல விளையாட்டுகள் வன்முறை நிறைந்ததாகவே உள்ளன. இந்தியாவில் மட்டும் 2022-ம் ஆண்டுக்குள்ளாக 370 மில்லியன் பேர் ஆன்லைன் விளையாட்டுக்களை விளையாடுபவர்களாக அதிகரித்திருப்பர் என்று கணக்கெடுப்பின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆன்லைன் விளையாட்டுக்கு அடிமைப்பட்டிருக்கும் சிறுவர்களிடம் காணப்படும் பொதுவான மனரீதியான மாற்றங்கள்:

**1. அதிகப்படியான கோபம்**

ஒருவேளை பிள்ளைகள் பெற்றோர்களால் அழைக்கப்படும்போதோ, அல்லது அவர்கள் உபயோகிக்கும் இண்டர்நெட் சேவை பாதிக்கப்பட்டாலோ அவர்கள் கட்டுக்கடங்காத கோபத்தை வெளிப்படுத்துகின்றனர். தேவையில்லாத காரியங்களுக்கு கத்தி கூச்சலிட்டு, அல்லது கிடைக்கும் பொருட்களை தூக்கி எறிந்து விடுகின்றனர்.

**2. தனிமை**

எப்போதும் தனியாக ஒரு இடத்தில் இருப்பதையே விரும்புபவர். அவர்கள் நண்பர்கள், உறவினர்களோடு உள்ள உறவு குறைய ஆரம்பிக்கிறது. அதற்குப் பதிலாக, முகமறியாத நண்பர்கள் (Chat) அவர்களின் விளையாட்டுகளில் வருபவர்களோடுதான் அவர்கள் நேரம் செலவிட விரும்புவர்.

**3. மனஅழுத்தம்**

விளையாட்டுகளில் தோல்வியை சந்திக்க நேரிடும்போது அவர்கள் அதிக மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். படிப்பில் கவனத்தை இழக்கின்றனர்.

**உடலளவில் ஏற்படும் மாற்றங்கள்:**

தலைவலி (மைக்ரைன்); கண்பார்வை குறைபாடு; தூக்கமின்மை; உடல் உழைப்பின்மை

**பெற்றோர்களின் பங்கு:**

1. நேரத்தை எவ்வாறு திருடுகிறது என்பதை தெளிவாக விளக்குங்கள். தேவனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தேவனுடைய நேரத்தை திருடுகிற காரியத்தை செய்யும் அனைத்தும் தவறு என்பதை எடுத்துக்கூறுங்கள்.
2. கோபப்பட்டு திட்டுவதினாலோ, தண்டனை கொடுப்பதின் மூலமாகவோ நாம் விரும்பத்தக்க மாற்றத்தை கொண்டு வர இயலாது. மாறாக, ஜெபத்துடனும், அன்புடனும் பொறுமையாக கையாளுங்கள்.
3. தேவைப்பட்டால் சபைப்போதகரின் உதவியை நாடலாம்.
4. குழுவாக விளையாடும் விளையாட்டுகளில் (Multiplayer Playing Games) ஈடுபடுகிறவர்களானால் உங்களுடைய ஆலோசனையும், வழிநடத்துதலும் அவர்களுக்கு மிக அதிகமாக தேவைப்படும்.
4. Pocket Money கொடுக்கும்போது அதை ஆன்லைன் விளையாட்டுகளுக்காக செலவழிக்கிறார்களா என்று கவனியுங்கள்.
5. உங்கள் பிள்ளைகள் பொதுவாக தனியாக அமர்ந்து ஆன்லைன் கேம் விளையாட அனுமதிக்காதீர்கள். நீங்களும் அவர்களோடு இருங்கள். குறிப்பிட்ட நேரத்திற்குள் விளையாடுவதை நிறுத்த சொல்லுங்கள். அளவுக்கு மீறும் எந்த ஒரு காரியமும் அது ஆபத்தையே கொண்டு வரும்.
6. ஆன்லைன் வகுப்புகளில் பங்குபெறுவதற்காக செல்போனைக் கொடுக்கும் போது அவர்களை அவ்வப்போது கண்காணியுங்கள்.

எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர் இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக. ஆதி.48:16 என்ற வசனத்தின்படி தேவன் உங்கள் பிள்ளைகளை தீமைக்கு விலக்கி ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

## போட்டி எண் - 85 (சரியான விடைகள்)

**தானியேல் :** 1.அகாஸ்வேரு; | 2.மேதியனாகிய தரியு; | 3.தானியேல்; | 4.பெல்ஷாத்சார்; | 5.மிகாவேல்; | 6.கோரேசு; | 7.தானியேல். அனனியா. மீஷாவேல், அசாரியா; | 8.1335 நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன்; | 9.ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும்; | 10.தென்திசை ராஜா; | 11.தானியேல்; | 12.நீரே (நேபுகாத்நேச்சார்).

**ஓசியா :** 13.இஸ்ரவேல்; | 14.காற்றை, கொண்டற்காற்றைப்; | 15.எப்பிராயீம்; | கடாரியாயிருக்கிறான்; 16.பலியை அல்ல, தகனபலிகளைப் பார்க்கிலும், 17.திருப்பிப்போடாத; | 18.கோவில்களைக்; | 19.உண்மையும், இரக்கமும், தேவனைப்பற்றிய; | 20.எப்பிராயீமர்; | 21.பேதையான; | 22.தேவனை; | 23.அப்பஞ்சுடுகிறவன்; | 24.எப்பிராயீமின, பறவையைப் போல்; | 25.விக்கிரகங்களோடு.

## போட்டி எண் : 85 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:** கந்தையா; பிரபா; சாந்தி; S.ஜெயா; புனிதா ஜேசுராஜன்; T.கலா; சந்தியா; E.கலா; E.செல்வி; M.எஸ்தர்; பூங்கோதை ; K.ராஜீ; மாரிமுத்து தாவீது; A.புனிதவள்ளி; சித்ரா பிளஸ்சி; நந்தினி; கனகவல்லி; தங்கமணி; சுபா; மரகதம்; ராதாமணி; A.மஞ்சு; தமிழ்செல்வி; எப்சிபா; ரோஸ்லின்; மதி; A.மேரி; ராணி; C.குமார்; ரம்யா; கிறிஸ்டி; பியூலா; சாராள்; மாது; கோகிலா; கிரிஜா; முத்துலெட்சுமி; அமுதா; மகேஸ்வரி; குளோரி; எஸ்தர்கலா; சுமதி; K.மஞ்சு ; | **திருநின்றவூர்** : சுமதி; கேத்ரின்; சிவராஜ்; அம்மு; சிவானந்தம்; ராஜேஸ்வரி; எழிலரசி; சுகிபெல்;ரோசி ; | **தேனி** : தனம்; மீனா; லீலாவதி; ராகேல்; பிரின்ஸி; | **தூத்துக்குடி** : கிருபா ஷாலிகா ஜெஃப்ரி; கெஸிமா; சில்வெஸ்டர்; புரூசிமா; |**பரமத்திவேலூர்:** பாமா; வினு கிருபா; கெத்சியாள் பூவிழி; ராஜலட்சுமி ; |**இறச்சகுளம்** : அமலாவேணி; கனகமணி; சகாயமேரி; கலா; நளினா ஷாலினி; ஜெஸி; எஸ்தர்; மோனிஷ் ; | **கோவை** : பெனினாள்; சாமுவேல் பிரகாஷ்; பத்மினி; மேரி; ரோஸ்லின் ; |**பெருந்துறை** : ரோமுலஸ்; கெத்சியாள்; ஸ்டெல்லா; ஜெனிப்பர் ; | **ஆறுமுகநேரி** : பிரேமா; எஸ்தர் வெண்ணிலா; பானுமதி; கஸ்தூரி ; |**நாசரேத்** : பொன்மணி; எஸ்தர்; ஜூடித்; தாசன்மோசஸ் ; | **மடத்துக்குளம்** : ரூத்; ஸ்டெல்லா மேரி; மெரிலின் கிருபா ; | **வந்தவாசி** : தயாபிரெய்சி; அபிஷா சுமதி; அபிகாயில் மீனா; | **மதுரை**: தமிழ்செல்வி; கனகவல்லி; சுபத்ரா ; | **ஸ்ரீவில்லிபுத்தூர்** : புஷ்பா; நெல்சன் செல்வராஜ்; ஜெயராணி;| **திருச்சி** : சந்திரா; சாந்தி; கிறிஸ்டி மகாலஷ்மி ; |**சொக்கன்குடியிருப்பு** : ஜான்சிராணி; ஸ்டீபன் தேவசகாயம் ; | **ஏர்வாடி** : மரகதம் ; |**வால்பாறை** : வனராஜ் மொழி; டானியேல் ; | **கடையநல்லூர்** : மேரிகுட்டி; தங்கராஜ்; நளினி; | **வடக்கு ஆத்தூர்**: மகேஸ்வரி; ரூத் பாக்யவதி | **அச்சிறுபாக்கம்** : ரேஷ்மா; தமிழ்செல்வி;|**KTCநகர்**: பிரேமா ரூத்; சில்வியா; ஜெசிலி; பத்மநேரி : வாணி; சுபா; | **முத்தையாபுரம்** : காபிரியேல் அந்தோணி; ஜீவிதா ; | **மதுராந்தகம்** : நாகலெட்சுமி; செல்வி ; | **வத்ராப்** : ஜெபராணி; கல்பனா; ; |**சென்னை** : ஜெபகனி; சந்திரா ; | **தஞ்சாவூர் வல்லம்** : விஜி; தேவகுமார் ; | **பாண்டிச்சேரி** : டெல்பின் விண்ணரசி; கிறிஸ்டினா ரூபி ; | **பெங்களூர்** : தேவபிரியா; ஜெபமணி; |**கோவில்பட்டி** : வால்டர் சிங் ; | **கொட்டாகுளம்** : ஜான்சிராணி; ஏஞ்சல் ; | **கல்லல் (சிவகங்கை)** : அபிஷாக்; | **நாகமலை** : விஜிலா; |**ஆரல்வாய்மொழி** : டெலினா ; | **காளையார்கோவில்** : அருளானந்தம் ; | **உடுமலைபேட்டை** : ரமாப்பிரியா ; |**கன்னிசேரி (வி)** : பியூலா கல்யாணி; |**குடியாந்தம்** : வேதமுத்து; |**கிச்சிப்பாளையம்** : ராணி ; | **கும்மிடிப்பூண்டி** :இம்மானுவேல்; |**ஏரல்** : சிவகாமி ; |**புளியங்குடி** : ஜெயமணி ; | **ஒட்டப்பிடாரம்** : தங்கமாரி; ; | **கஞ்சிகோயில்** : கீர்த்தனா; **இராமன்புதூர்** : பத்மினி; | **உத்தமபாளையம்** (தே) : மேரி மரகதம் ; | **திசையன்விளை** : ஜெயசீலி ; | **பாளையங்கோட்டை** : சாந்தகுமாரி ; | **ஆலங்குளம் (வி)** : ஸ்டெல்லாமேரி ; | **பழையகாயல் :** எலிசபெத் ; | **கடலூர்** : சுகிர்தா; ; | **பெரியகுளம்** : மனோகாசி; | **கீழ்வேளூர்** : கிரேனாப்பு ; |**நத்தகடையூர்** : ஏசியன்; |**ஓசூர்** : ஆலிஸ் மார்கஸ்; | **திருச்செந்தூர்** : பியூலா; **கொங்கந்தான்பாறை** : சந்திரா ; | **நாகர்கோவில்** : ஜோதி; | **உவரி** : ஜேனட் ; | **கடாட்சபுரம்** : ரேவதி; |**சின்னாளபட்டி** : சலோமி ; | **வேப்பூர்** : சரோஜினி; | **வில்லியனூர்** : செல்லப்பன்; | **கொட்டிவாக்கம்** : எலிசபெத் ; | **நாகபட்டிணம்** : ரஞ்சித்; | **பள்ளிக்கரணை** : பொன்செல்வி; | **ஆம்பூர் (திருப்பத்தூர்)** : கிரிஜாசத்யா ; | **சாத்தூர்** : கீதா வசந்தகுமாரி ; | **கோடம்பாக்கம்** : அருள்மேரி; | **நேர்குன்றம்** : ஆலிஸ்மேரி.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 86

(யோவேல் முதல் நாகூம் வரை இருப்பிடத்துடன் விடை எழுதவும்

### யோவேல்

1. யார் இரட்சிக்கப்படுவான்?
2. உங்கள் மண்வெட்டிகளைப் -------- உங்கள் அரிவாள்களை -------- அடியுங்கள்.
3. எது மனுபுத்திரரைவிட்டு ஒழிந்து போயிற்று?

### ஆமோஸ்

1. அக்காலத்திலே யார் மௌனமாயிருக்க வேண்டும்?
2. இரண்டுபேர் -------- ஒருமித்து நடந்துபோவார்களோ?
3. எது பெனாதாதின் அரமனைகளைப் பட்சிக்கும்?
4. எவைகளைப் பச்சைப்புழு அரித்துப்போட்டது?
5. நியாயத்தை -------- நீதியின் கனியை -------- மாற்றினீர்கள்.
6. யார் பட்டயத்தினால் சாவார்கள்?
7. யார் தன் பிராணனை இரட்சிப்பதுமில்லை?
8. எது ராஜாவின் பரிசுத்த ஸ்தலமும் ராஜ்ஜியத்தின் அரமனையுமாயிருக்கிறது?
9. யார் எதினால் சோர்ந்துபோவார்கள்?

### ஒபதியா

1. யார் வைக்கோல் துரும்பாயிருப்பார்கள்?

### யோனா

1. நான் எபிரெயன் என்று சொன்னவன் யார்?
2. விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது எது?
3. யார் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்?

### மீகா

1. யாருக்கு ஐயோ?
2. யாரை விசுவாசிக்க வேண்டாம்? யாரை நம்ப வேண்டாம்?
3. இஸ்ரவேலுடைய நியாயாதிபதியைக் -------- கன்னத்தில் அடிப்பார்கள்?
4. -------- போல முழு மொட்டையாயிரு.
5. எதை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?
6. -------- கூலிக்கு உபதேசிக்கிறார்கள்.
7. சியோனிலிருந்து -------- எருசலேமிலிருந்து -------- வெளிப்படும்.

### நாகூம்

1. -------- பலப்படுத்து -------- கெட்டிப்படுத்து.
2. -------- காத்துக்கொள் -------- காவல்பண்ணு.

| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.04.2021 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |
|---|---|



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## வேப்பனப்பள்ளி ஏஜி சபை பிரதிஷ்டை (19.01.2021)










## பாஸ்டர் A.எபனேசர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் கூட்டம் (8.02.2021)















Registered News Paper Regd. No. 8206 / 62

## நாசரேத் மண்டல உபவாச ஜெபம் – 26.01.2021









# எழுப்புதலின் 10 ஆண்டுகள்

## DECADE OF REVIVAL
## 2021-2030

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165